
# திருக்கோயில்



ஜூன்
1999

விலை
ரூபாய் ஐந்து





சென்னை மேற்கு மாம்பலம் அருள்மிகு கோதண்டராமர் ஆலயத் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன்அவர்கள் வடம்பிடித்துத் தேர்த் திருவிழாவினைத் துவக்கி வைத்தார்கள். சைதை சட்டமன்ற உறுப்பினர்திருமிகு கா. கிட்டு அவர்களும், இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையாளர் திருமிகு ப. தனபால்,எம்.ஏ.,பி.எல்.,சென்னை இணை ஆணையாளர் திருமிகு கோ. பக்கிரிசாமி,பி.எஸ்.சி., பி.எல்., உதவி ஆணையர் திருசுப்பிரமணியம், எம்.ஏ.பி.எல்.ஆலய செயல் அலுவலர் திரு சந்திரசேகரன், ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு ஆனி | மணி |
|---|---|---|---|
| 41 | ஜூன் 1999 | | 6 |



**சிறப்பாசிரியர்**

**சுகவனேஸ்வர்**, இ.ஆ.ப.,

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

**ஆசிரியர்**

**முனைவர். த. அமிர்தலிங்கம்,**

எம்.ஏ., பி.எச்.டி.,

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,

கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.,

இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.,

ஆணையாளரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு)

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.


**முகப்பு**

**திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி ஆலய முகப்பின் அழகிய தோற்றம்**

## பொருளடக்கம்


*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் சட்டப் பேரவையில் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் பதிலளித்து ஆற்றிய சிறப்புரை*

*தெய்வச் சேக்கிழார் வாழ்வும் வாக்கும்*
- சுகவனேஸ்வர், இ.ஆ.ப. சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்

*அருள்மிகு தாயார் போற்றி*

*ஸ்ரீ வைணவம்*
- திருமதி இரா. பத்மாவதி, பி.ஏ., பிஎஸ்.சி., எம்.எட்.

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

*சிவராத்திரி புராணக் கதைகள்*
- நடராசன் அடிமை

*குருவருள் திருஇரும்பூளை திருத்தலம்*
- கோ. சிவஞானம்

*நூல் மதிப்புரை*
- அ. அருள்செல்வி

*வினாவும் விடையும்*
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*


2,3

**மாண்புமிகு தமிழ்ஆட்சிமொழி, தமிழ்வளர்ச்சி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள் சட்டப் பேரவையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக்கோரிக்கையில் பதிலளித்து ஆற்றிய சிறப்புப் பேருரை**



'என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார் அன்னைத் தமிழுக்கு அணி செய்யுமாறே' என்ற ஒரு மந்திரத்தை ஓதி, இந்து அறநிலையத் துறையின் சார்பில் கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

அறநிலையத் துறையின் சார்பில் பேசிய எல்லோருடைய கருத்துக்களையும் நினைவில் கொண்டு, தக்க தீர்வு காணப்படும் என்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு எழுத்து வடிவமான விடையே தரப்படும் என்பதையும் நான் உறுதி செய்கிறேன். ஏராளமான நண்பர்கள் இதிலே இருக்கின்ற புள்ளி விவரங்களைத் தெரிவித்திருக்கிற காரணத்தால், அவற்றை நான் மீண்டும் திருப்பிச் சொல்லத் தேவையிராது என்று கருதுகிறேன். அந்த வகையில், எத்தனையோ கோயில்கள் பெரிய வருவாயைப் பெற்றிருந்தாலும் ரூ.1000-க்கும் குறைவான வருமானம் உள்ள கோயில்கள் ஏறத்தாழ 27 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. அதனால்தான், பெரிய கோயில்களை நாம் சிறப்பாக அந்தந்த வருவாயைக் கொண்டு பேணுகின்றபோதுசிறிய கோயில்களைப் பேணுவதற்கான அடிப்படை இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. வருவாய், ரூபாய் 1000-ஆக இருந்தாலும், அந்தக் கோயிலுக்கு இருக்கிற தேர் பெரியதாக இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு இருக்கிற குளம் பெரியதாக இருக்கிறது. அந்தக் கோயிலே பல கோபுரங்களைக் கொண்டதாக இருக்கிறது. எனவேதான், திருப்பணி என்று தொடங்கிவிட்டால், பல இலட்சக் கணக்கான ரூபாய் அதற்குத் தேவைப் படுகிறது. இதை எப்படி ஈடுகட்டுவது என்பதில் தான் அடிப்படை இடர்ப்பாடு இருக்கிறது. காரணம், இந்து சமய அறநிலையத் துறையினுடைய அடிப்படை நிலையே எந்தக் கோயிலில் வருவாய் வருகிறதோ அந்தக் கோயில் வருவாய் அந்தக் கோயிலுக்குத்தான் செலவிடப் படவேண்டும். ஆனாலும் கூட, அரசினுடைய விருப்பத்தின் அடிப்படையிலும், வேறு சில தீர்வுகளின் அடிப்படையிலேயும் தான் பெரிய கோயில்களிலிருந்து ஓரளவிற்கு - அது பேரளவுக்கு என்று கூறமுடியாது; பேரளவுக்கு கடன் வாங்கி விட்டால் பிறகு அந்தக் கோயிலும் வறுமைக்கு ஆளாகிவிடும். எனவே, ஓரளவிற்கு அதைப்பெற்றுத் திருப்பணிகளைச் செய்கிறோம். அதனால்தான் அடிப்படைப் பணிகளை நிறையச் செய்தாலும், முழுமையாக நிறைவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நல்ல, வரலாற்றுச் சார்புடைய கோயில்கள், மூவர் தேவாரம் பாடியவர்களால் பாடல் பெற்ற தலங்கள் என்றெல்லாம் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கின்ற போது மனம் வேதனைப்படுகிறது. காரணம், கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நாட்டியக் கலை என்று அத்தனைக் கலைகளுக்கும் பிறப்பிடமாக இருக்கின்ற அந்தக் கோயில்கள் பழுதடைந்தும், சிதிலமடைந்தும் இருப்பது உண்மையிலேயே அரசுக்கு வருத்தத்தைத் தருகிறது. ஆனாலும், தீர்வு காணுவதை நோக்கி அது முன்னேறுகிறது.

பொதுவாகவே, நிலுவைகள்தான் இப்போது இழுவைகளாக இருக்கின்றன. அதனால்தான் இப்போது 79-இ என்ற சட்டப் பிரிவைக் கொண்டு வந்திருக்கின்றோம். உங்களுக்குத் தெரியும் குத்தகைதாரர்களை மாவட்ட ஆட்சியர் எப்படி நில வருவாயைத் தராவிட்டால் அங்கே நேரடியாகச் சென்று, அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யக்கூடிய அளவுக்கு சூழ்நிலை இருக்கிறதோ, அதே சூழ்நிலையில்தான் இந்தச் சட்டப்பிரிவு இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் நினைவுறுத்த விரும்புகிறேன்.

நம்முடைய பழனிசாமி கூடக் குறிப்பிட்டார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் அதை அற்புதமாகச் சொன்னார்கள். ஏமாற்றுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. குத்தகைதாரர்கள் ஏமாறுகிறார்கள் என்று சொன்னார்கள். நாகரீகமாகச் சொன்னார்கள். உண்மையிலேயே சொல்கிறேன், திருவாரூர் கோயிலிலேயே கூட 896 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு, ஓராண்டிற்கு வரவேண்டியது 2098 குவின்டால் நெல். ஆனால் 13 ஆண்டுகளாக ஒரு படி நெல் கூடத் தரப்படவில்லை. நீங்கள், 13 வருடங்களாக விளையவே இல்லை என்று சொல்வீர்களா? தருவதற்கு மனமில்லை என்று சொல்வீர்களா? என்பதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். அதனால் தான் விளைகின்ற வாய்ப்பு வருகின்றபோது கொடுத்துக் கொண்டிருந்தால், விளையாதபோது தள்ளுபடி செய்வதிலே அரசுக்கு எந்தவித இடரும் இருக்காது. ஆனால், அப்படிப்பட்ட மனமே இல்லை என்பதை நான்கூடக் குறிப்பிடவில்லை. 'தினமணி' தன்னுடைய ஆசிரியர் உரையிலேயேகூடத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள். ''சிவன் சொத்து குலநாசம் என்ற பழமொழி வழங்கி வரும் மண்ணில் இந்த நிலை; குத்தகை விகிதம் எவ்வளவு தெரியுமா? விளைச்சலில் 75 விழுக்காடு -முக்கால் பாகம் குத்தகைத்தாரர்களுக்கு, கால் பாகம் நில உரிமையாளரான ஈசனுக்கு; அதையும் செலுத்த குத்தகைதாரர்களுக்கு மனம் வரவில்லையே என்று தினமணி ஏடு எழுதுகிறது. நீங்களும் அந்தக்குரலைக் கேட்பீர்கள் என்று நான் கருதுகிறேன். என்றாலும் கோயிலிலேயே இவற்றைச் சீர்திருத்தம் செய்வதற்கு முன்னர் எங்களுக்கு அடிப்படையில் இந்தக் கோயில்களை அணுகு கிறபோது - எங்களுக்கு அடிப்படையில் ஒரு கோட்பாட்டை தலைவர் கலைஞர் அவர்களே 1952-53-ல் வெளிவந்த பராசக்தி திரைப் படத்தில் எங்களுக்குத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலும் நாங்கள் இதை அணுகுகிறோம் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

பராசக்தியிலே இப்படி ஒரு உரையாடல் வரும், உங்களுக்குத் தெரியும். 'கோயிலிலே குழப்பம் விளைவித்தேன், கோயில் கூடாது என்பதற்காக அல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக: நான் பூசாரியை தாக்கினேன், அவன் பக்தன் என்பதற்காக அல்ல, பக்தி பகல் வேஷம் ஆகிவிட்டதைக் கண்டிப்பதற்காக' என்ற இந்த அணுகுமுறையை, இதற்கு வழிகாட்டியை இந்து அறநிலையத் துறைக்கு 1953-லே வழங்கிய தலைவர்தான் இப்போது இதை உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே இந்த வழிகாட்டுதலோடு நாங்கள் செயல்படுகிறபோது இப்போது நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக இந்த 1405 வது நிதியாண்டில், பசலி என்று சொல்லப்படுகிற நிதியாண்டில் 668 இலட்சமாக இருந்த அந்த வருவாய், இப்போது 1018 இலட்சமாகக் கூடியிருக்கிறது. அது இந்தத் துறையினுடைய முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று நான் கருதுகிறேன். அதேநேரத்தில் இதிலே 3 1/2 கோடி ரூபாய் வருவாய் அதிகமாகிறது என்று சொன்னாலும்கூட, 'கடன் கேட்காமல் கெட்டது' என்று ஒரு பழமொழி உண்டு; அலுவலர்களும் சில நேரம் கேட்காமல் காலம் கடத்தியிருக்கிறார்கள். சிலநேரம் கேட்டாலும் கண்டுகொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு நிலைகளிலே பல தவறுகள் நேர்ந்திருக்கின்றன. ஒரு பக்கத்திலே நிலுவையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிற அதேநேரத்தில் தவறு செய்த அனைவரையும் தண்டிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவேதான் அவை யெல்லாம் செம்மைப் படுத்தப்பட்டு அனைவரும் தங்களுடைய கடமையைச் செய்யவேண்டுமென்று வலியுறுத்தப் படுகிறது. அந்த அடிப்படையில் இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியில் மாண்புமிகு தலைவர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவித்ததைப்போல 1925-ல் தொடங்கப்பட்டது அறநிலையத் துறை. ஏறத்தாழ 70 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சொத்துப் பதிவேடுகள் 1192 மட்டும்தான். நான் சொல்வது 70 ஆண்டுகளில். ஆனால் இந்த 3 ஆண்டுகளில் மட்டும் 1722 சொத்துப் பதிவேடுகளை உறுதி செய்து சொத்து எங்கே இருக்கிறது என்பதை எல்லோருக்கும் அடையாளம் காட்டியிருக்கிறோம். ஏனென்றால் பலபேர் அதை கணக்கிலேயே காட்டுவது இல்லை. கணக்கு காட்டாமல் இருந்தால்தான் வசதி என்று பலரும் கருதியிருக்கிறார்கள். எனவேதான் கணக்கை எடுத்திருக்கிறோம். இன்னும் எஞ்சியிருப்பது 60 கோயில்களுக்கு மட்டும்தான். எனவே இப்படி கொண்டு வருவதன் வாயிலாக யாரும் கோயில் சொத்துக்களை மறைக்கமுடியாது. அடுத்து வருகிற அலுவலர்கள்கூட அதை மாற்றிப்பதிந்து கொள்ள முடியாத அளவுக்கு இப்போது அரசினுடைய ஏற்பைப் பெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மீட்கப்பட்ட நிலங்களில் பலவகை உண்டு. முற்றிலும் மீட்கப்பட்டன, நீதிமன்றத்திற்குச் சென்று சாதகமாக தீர்ப்புப் பெறப்பட்டன; திருக்கோயில் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா பதிவு செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டன, திருக்கோயிலுக்குப் பட்டா இருந்தும் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்தவை என்று பலவகைகள் இருக்கின்றன. நேரமின்மை காரணமாக நான் விரிவாக படிக்கவில்லை. ஒரே வரியில், இத்தனையும் சேர்த்தால் இந்த அரசு, இந்தத் துறை இந்த 2,3



குன்றத்தூரில் தெய்வச் சேக்கிழார் விழா 14.5.99 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சென்னை இணை ஆணையாளர் திருமிகு கோ. பக்கிரிசாமி, பி.எஸ்.சி., பி.எல்., வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல்., சென்னை உதவி ஆணையாளர் திருமிகு சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல்., திருக்கோயில் இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஆண்டுகளில் மட்டும் 6229 ஏக்கர் நிலங்களை இந்த வகையில் அடையாளம் கண்டு மீட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே பல கணக்குகள் இருக்கின்றன. அதேநேரத்தில் மனை நிலங்கள் இருக்கின்றன. 1944 கிரவுண்ட் என்று சொல்லப்படுகிற மனைநிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சென்னையில் ஒரு மனைநிலத்தினுடைய விலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். எனவே மீட்கப்பட்ட நிலத்தினுடைய அளவு அதிகம், அந்த அளவுக்கு இந்தத் துறை கடும் முயற்சியை மேற் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில இடங்களில் கடுமையாகத்தான் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. குன்றத்தூரிலே 74 மனைகள் 135 பேர்- யாரோ ஒருவர் அதை விலைக்கு விற்றுப் போய் விட்டார்கள். எங்கள் சொத்தை எடுத்து அவர்கள் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவர்கள் விற்றுவிட்டுப் போய்விட்டார்கள். கடைசியிலே என்ன ஆயிற்று? மின் துண்டிப்பு செய்துதான் அவர்களை கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகுதான் குத்தகைதாரர்கள் ஒழுங்காக முறையான குத்தகையை செலுத்தி இன்றைக்கு அவர்களுடைய வரவை ஒழுங்காக கோயிலுக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி பல இடங்களில் இருக்கிற காரணத்தால் நடவடிக்கைகளைக் கடுமையாக எடுக்க வேண்டியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையிலேகூட ஆளவந்தான் அறக்கட்டளைக் குத் தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இன்றைக்கு இதழ்கள் கூட எழுதின. கிட்டத் தட்ட 285 ஏக்கர்- மாமல்லபுரக் கடலோரத்தின் 285 ஏக்கர் மீட்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைப் போலத்தான் திருத் துறைப்பூண்டி வீரன்வயலிலே 621 ஏக்கரும் நீதி மன்றத்தில் தீர்ப்பாகி வந்திருக்கிறது. இப்படி பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இன்றைக்கு இந்தத் துறை சிறப்பாக மிளிர்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காஞ்சி நகரத்திலே கூட இப்போது அண்மையிலே 6 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது; காஞ்சி நகரத்திலேயே, அதனால்தான் 11 கட்டடங்கள் இடிக்கப்பட்டன. அதையும் நான் சொல்லி விடவேண்டும் உங்களுக்கு, தவறான பொருளில் இல்லை. நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பு என்று தீர்ப்பு வந்தவுடனேயே அடுத்த நொடிகூட காத்திராமல் மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலோடு அன்றைக்கு இடித்துவிட்டோம் என்பதை வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்கிறேன். வேறு வழியில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையில் அதை செய்து தீரவேண்டிய கடமை இருக்கிறது.

அதே நேரத்திலே இன்னும் 600 வீடுகள் முறைப்படி நடவடிக்கையில் இருக்கின்றன. அவர்கள் தருவது எவ்வளவு தெரியுமா வாடகை ஒரு வீட்டுக்கு- மாதத்திற்கு 5 ரூபாய், ஒவ்வொரு வீட்டுக்கு 5 ரூபாய் கொடுத்துவிட்டு கோயில் நிலத்தில் நல்ல படியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சென்னையிலேயே ஒருவர் 1894 சதுர அடியில் 5 மாடி கட்டடம் அனுமதி இல்லாமலேயே கட்டி இருக்கிறார். அனுமதியே கிடையாது. 5 மாடி கட்டடம் கட்டியிருக்கிறார். 5 மாடியிலும் கிட்டத்தட்ட 20 கடை வாடகைக்கு விட்டு 1 இலட்சம் ரூபாய் சம்பாதிக்கிறார். அவர் திருக்கோயிலுக்கு தருகின்ற வாடகையைப் பார்த்தால் நீங்கள் வியந்துபோய்விடுவீர்கள், அயர்ந்து போய்விடுவீர்கள். வெறும் இரண்டே ரூபாய். இது தான் நிலை. எனவே, இதற்குக் கடுமையாக நடவடிக்கை எடுக்காமல் எப்படி செயல்படமுடியும்? ஒன்று அந்த 5 மாடி கட்டடம் இடிக்கப்பட வேண்டுமென்று நேரடியாகப் பார்வையிட்ட போதுதான் அவர் முறையாக கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு 6,000 ரூபாய் வாடகை தரக்கூடிய அளவுக்கு இன்றைக்கு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரண்டு ரூபாய் எங்கே 6000 ரூபாய் எங்கே என்பதை, 12 மாதத்திற்கு எவ்வளவு என்பதை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எனவேதான் இதுபோன்ற பணிகளைச் செய்கிற போது, அந்த நிலையிலும் இந்தத் துறை ஆழ்ந்து செய்யவேண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் இதுபோல, ஈரோட்டிலே பெருந்தலையூரிலே நாங்கள் ஈடுபட்டு நிலத்தை மீட்டோம், 19 ஏக்கர் நிலத்தை மீட்டோம். அந்த ஊராட்சி மன்றத் தலைவர் எழுதுகிறார். கடந்த 30 ஆண்டுகளாகத் தீர்க்க முடியாது இருந்த இந்தப் பிரச்சினையை எந்தவிதமான அசம்பாவிதம் நிகழாமல் அதேசமயத்தில் சுமூகமான முறையில் தீர்த்து கோயில் நிலங்களை மீட்டு, கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க உதவிய அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்தார் என்று சொன்னால் இது தான்நாங்கள் செய்கின்ற பணி. எனவே இதை செய்கிறபோது இந்தத் துறை சில நேரம் போராடியும் மீட்க வேண்டி யிருக்கிறது. அதையும் சொல்கிறேன். கோவையில், கிட்டத்தட்ட 135 மனைநிலம் அண்மையில் அங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கே இருக்கிற காவல் துறை மேல் அதிகாரிஎல்லோரும் சேர்ந்து போராடி ஒரு 1000 குடிசைகளை அகற்ற வேண்டியிருந்தது. அதே நேரத்திலே, திருப்பூரிலே 54 கிரவுண்டு நிலம் மீட்கப்பட்டிருப்பது நம்முடைய சுப்பராயன் அவர்களுக்குத் தெரியும். எனவே இப்படி பல இடங்களில் விலை உயர்ந்த நிலங்கள்மீட்கப்பட்டுள்ளன. திருப்பூரிலே 54 மனை என்றால் என்ன விலை என்று நீங்கள் பார்க்க வேண்டும்; அதே நேரத்தில் கோவையிலேயே 135 மனை என்றால் என்ன விலை என்று பார்க்க வேண்டும். இவை எல்லாம் விலை உயர்ந்தவை. இப்படி இந்தத் துறை மெல்ல மெல்ல அவற்றை செம்மை செய்து தன்னுடைய நிலைக்குக் கொண்டு வருகிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்போது நியாய வாடகை நிர்ணயம் செய்கிறோம். அப்படி நிர்ணயம் செய்வதினாலேயே எதிர்பார்க்கக்கூடிய கூடுதல் வருமானம் 114 இலட்சம்;1 கோடியே 14 இலட்சம் கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கப்படுகிறது. அதனால்தான் இந்தச் சட்டப் பிரிவு வந்தது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஏராளமான வழக்குகள், என்ன நிலை என்று கேட்டால், அதில்தான் இன்னும் எங்களுக்கு சரியான ஒரு பிடி கிடைக்கவில்லை, ஒரு வழக்கு ஏறக்குறைய 16 ஆண்டுகள் நடந்து தீர்ப்பு வந்தது. அமீனா என்று சொல்லப்படுகிற அந்த நடவடிக்கை எடுக்கக்கூடிய அலுவலர் அந்த இடத்திற்குப் போய், அதற்கப்புறம் நடவடிக்கை எடுக்க முடியாமல், என்ன காரணத்தாலோ தெரிய வில்லை. அதற்கப்புறம் 15 ஆண்டுகள் நடந்திருக்கிறது. எனவே ஒரு வழக்கிற்கு 31 ஆண்டுகள் என்று சொல்லலாம். இதற்கு எதாவது ஒரு வகையில் தீர்வு காணவேண்டும். இது வேறு எங்கும் அல்ல, சென்னையிலே மயிலாப்பூரிலே கபாலீஸ்வரர் கோயில் சொத்திலே இருக்கிறது. எனவே, இப்படி நிலைகளை ஆய்ந்து முயற்சி செய்து பணி செய்கின்றோம். அதே நேரத்தில் எங்களுக்கு ஆள் பற்றாக்குறை இருக்கிறது என்பதையும் மறுக்க வில்லை. இத்தனை கோயில்களுக்கும் சேர்த்து எங்களுக்கு இருக்கிற செயல் அலுவலர்கள் 446 பேர் தான். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். எனக்குத் தெரிந்த வரையில் ஒரே நேரத்திலே, இத்தனை செயல் அலுவலர்களை எந்த முதலமைச்சரும் இதுவரைக்கும் இந்த வரலாற்றில் வழங்கியது கிடையாது. 200 செயல் அலுவலர்களை கடந்த ஆண்டு வழங்கி 446 ஐ 646 ஆக்கக் கூடிய அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தி இருக்கிறார். அது தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டிய காரணத்தினால் சற்று காலதாமதம் ஆகிறது. என்றாலும் இப்போது ஒரு 62 பேரைக் கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இந்த அதிகாரிகள் அதிகம் ஆகும்போது எங்களுக்கு வேலை எளிதாக இருக்கும். எனவேதான் , அதை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் சமத்துவபுரங்களுக்கு இடம் வழங்குவதில், கல்வி நிறுவனங்களுக்கு இடம் வழங்குவதில் இந்த அரசு அதுவும் குறிப்பாக அற நிலையத் துறை தாராளமாக இருக்கிறது. இலவச மாக வழங்குவதாக யாரும் நினைத்துவிட வேண் டாம். முழுக்க முழுக்க அப்போது அந்த இடத்திற்கு என்ன சந்தை விலை மதிப்போ, அதைப் பெற்று நிரந்தர வைப்பில் கணக்கில் போட்டுக்கொண்ட பிறகுதான் இடங்கள் வழங்கப்படும். வேண்டுமானால் முன்நுழைவு அனுமதி வழங்குகிறோம் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு முழுமையான தொகையைப் பெறுகிறோம். அந்தத் துறைகளும் கொடுத்துவிடுகின்றன. இதுதான் நிலைமை. எனவே, இவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அளவிற்கு சமத்துவபுரங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆழ்ந்த சிந்தனைக் குப்பின் உருவான இந்தத் திட்டத்தில் அடித்தளமாக இருக்கிற நிலத்தை வழங்குகிற வாய்ப்பு அறநிலை யத் துறைக்கு கிடைத்தது என்பதில் நானும் அதோடு பங்குபெற்று மகிழ்ச்சியடைகிறேன். காரணம் பெரி யார் நினைவு சமத்துவபுரத்திற்கு இன்றைக்கு ஆலயத் தின் சார்பில் இருக்கின்ற இந்த இடம் உதவப்படு கிறது என்பதுதான், இரண்டுக்கும் ஓர் அருமையான உறவுப் பாலம் என்று நான் கருதுகிறேன். எனவே ஒரு அறிவியல்பூர்வமான ஒரு சமுதாய சீர்திருத்தவாதி யினுடைய பெயரால் ஒரு அற்புதமான ஆற்றல்மிக்க ஒரு தலைவருடைய முயற்சியால் எடுக்கப்பட்ட இந்த அடிப்படைப் பணிகளுக்கு ஆலய இடம் பயன்படுகிறது, அது முறையாகப் பயன்படுகிறது என்பதிலே நான் பெருமையடைகிறேன்.

இத்துறை ஆளுகையின் கீழுள்ள அருளாளர் களால் பாடல் பெற்ற 10 கோயில்களுக்குக் குட முழுக்கு செய்யப்படும். திருவேற்காடு அருள்மிகு கருமாரி யம்மன், திருவண்ணாமலை அருணாசலேசு வரர், மலைக்கோட்டை தாயுமானவர், சுவாமிமலை சுவாமிநாதர், கும்பகோணம் சாரங்கபாணி, பட்டீசு வரர் தேனுபுரீசுவரர், அண்ணன் கோயில், அண்ணன் பெருமாள், தேரழுந்தூர் வேதபுரீசுவரர், திருவில்லிப் புத்தூர் ஆண்டாள் நாச்சியார், திருச்செங்கோடு அர்த்த நாரீசுவரர் கோயில் ஆகியவை புதுப்பிக்கப் படும்.

இத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள 10 திருக்கோயில்களில் தேர்த் திருப்பணி செய்யப்படும். 1. திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக் கோயில் (விநாயகர் தேர்ப்பணி) 2. கடலூர் திருச் சோபுரம் அருள்மிகு திருச்சோபுரநாதசுவாமி திருக் கோயில் 3. கும்பகோணம் நாகேசுவரசுவாமி திருக் கோயில் 4. புதுக்கோட்டை நார்த்தாமலை அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில் 5. திருச்சேறை அருள்மிகு சாரநாதப் பெருமாள் திருக்கோயில் 6. திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் 7. நயினார் கோயில் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் புதிய தேர் செய்வதற்கு அனுமதி 8.சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், 9. திருவாலங்காடு அருள்மிகு வடவாரண்யேசுவரர் திருக்கோயில்,10. விராலிமலை அருள்மிகு சுப்பிர மணியசுவாமி திருக்கோயில் ஆகியனவாகும்.

ஒரு கால பூஜை நடத்த இயலாத 500 திருக் கோயில்களைத் தேர்ந்தெடுத்து, அதற்காக, ரூ.2500/- பொது மக்களிடம் நன்கொடையாகப் பெறுகின் றோம். நாங்கள் 22500 ரூபாயை தந்து விடுகிறோம். இதிலே கிட்டத்தட்ட 8 ஆயிரம் கோயில்கள் ஏற் கனவே பயன் பெற்று வருகின்றன இந்த ஆண்டும் 500 கோயில்கள் தேர்வு செய்யப்படும். உறுப்பினர் கள் அனைவரும் தயவுசெய்து ஆங்காங்குள்ள 2,3 கோயில்களைச் சுட்டிக்காட்டி எழுதினால் நிச்சயமாக அவற்றுக்கு உதவி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், அதன் சார் நிறுவனங்கள் மற்றும் தங்கும் விடுதி ஆகியவைகளுக்குக் குடிநீர் வசதியைப் பெருக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழனி நகராட்சியுடன் இணைந்த நிரந்தரக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 1 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இறையன்பர்களின் வசதியை முன்னிட்டு திருக்கோயில்களின் அருகில் கடற்கரை மற்றும் ஆற்றுப் படுகைகளில் படித்துறைகள், உடைமாற் றுக் கூடங்கள் மற்றும் கழிப்பிட வசதிகள் முதற் கட்டமாக 5 திருக்கோயில்களுக்குச் செய்து கொடுக்கப் படும். அவை 1. பவானி சங்கமேசுவரர் கோயில், 2. திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் 3. திருவரங்கம் அரங்கநாதசுவாமி (அம்மா மண்ட பம்) 4. இராமேசுவரம் இராமநாதசுவாமி 5. அழகர் கோயில் கள்ளழகர் திருக்கோயில்ஆகியவை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோக பழனி அருள்மிகு தண்டாயுத பாணிசுவாமி திருக்கோயிலுக்கு பங்குனி உத்திரம் போன்ற பெரிய விழாக்களுக்கு ஏராளமான இறை யன்பர்கள் நடைப்பயணமாக வருகிறார்கள். அவர் களின் வசதிக்காக 5 இடங்களில் ஓய்வு மண்டபம் கட்டப் பட்டு, அதற்காக துறை 25 லட்ச ரூபாயை செலவிடும்.

அதைப்போல திருக்கோயில்களில் உள்ள ஓவி யங்கள், சிற்பங்கள் ஆகியவற்றை ஏற்கனவே படம் எடுத்து 10 ஒளிப்பேழைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் 10 கோயில்களைத் தேர்ந்தெடுத்து ஒளிப் பேழைகள் உருவாக்க அரசுத் திரைப்படைத் துறைக்கு ரூபாய் 11 லட்சம் வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தெய்வச் சேக்கிழார் வாழ்வும் வாக்கும்

- சுகவனேஸ்வர், இ.ஆ.ப
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்

''தூக்குசீர்த் திருத்தொண்ட தொகைவிரி
வாக்கினாற் சொலவல்ல பிரான் எங்கள்
பாக்கியப் பயனாப் பதி குன்றைவாழ்
சேக்கிழானடி சென்னி இருத்துவாம்''

என்று மாதவ சிவஞானமாமுனிவர் சேக்கிழார் பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

''பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட பாடிய கவிவலவ'' என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தாம் பாடியுள்ள சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலில் சேக்கிழாரைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்திருக்கவும் காணுகின்றோம்.

சேக்கிழார் புராணம் பாடியுள்ள கொற்றவன் குடி உமாபதி சிவம் அவர்கள், சேக்கிழார் பெருமான் வான்மீகி முனிவரை விடவும், வேதவியாசரை விடவும், ஆதிசேடனை விடவும், அகத்தியரை விடவும் மிகப்பெருமை உடையவர் எனப் போற்றியிருப்பது இங்கு நாம் நினைந்து மகிழத்தக்கது.

''மதுர இராமாயண கதை உரைசெய்த
வான்மீகி பகவனும் ஒப்பல்ல;
விதிவழி பாரதம் உரை செய்து கரை செய்த
வேத வியாதனும் ஒப்பல்ல;
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்ல
பொதியமலை குறுமுனிவனும் ஒப்பல்ல
புகழ்புனை குன்றை முனிக்கு''

என்பது சேக்கிழார் புராணப் பாடல் ஆகும்.


ஒப்பேதும் இல்லாத குன்றைமுனிவர் எனப் போற்றப்படும் சேக்கிழார் பெருமான் பிறந்த ஊர் நம் சென்னையை அடுத்துள்ள குன்றத்தூர் ஆகும். சான்றோர் உடைத்தாய தொண்டை நன்னாடு 24 கோட்டங்களை அந்நாளில் கொண்டு விளங்கியது. அந்த 24 கோட்டங்களில் ஒரு கோட்டமாக சிறந்து விளங்கிய புலியூர் கோட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் வெள்ளியங்கிரி - அழகம்மை தம்பதிகளுக்கு மூத்த மகனாகப் பிறந்தவர்தாம் ''அருள் மொழித் தேவர்'' என்ற இயற்பெயரை உடைய நம் சேக்கிழார் பெருமான் ஆவார்.

சேக்கிழார் குடிக்கே அருள் மொழித் தேவரால் ஏற்பட்ட சிறப்புக் காரணமாக, ''சேக்கிழார்'' எனும் குடிப்பெயரே திருப்பெயராகவும் அமைந்து இன்றளவும் சிறப்புற்று விளங்கக் காண்கின்றோம். இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவராக விளங்கிய சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் ஆகிய அநபாயச் சக்கரவர்த்தி ஆண்ட சோழப் பெருமண்டலத்திற்கு அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று ''உத்தம சோழப் பல்லவர்'' எனச் சிறப்புப் பட்டமும் தந்து பாராட்டப்பெற்றதாக அவருடைய வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றது.

''உத்தம சோழப் பல்லவர்'' சோழப் பெருமண்டலத்தின் அமைச்சராக இருந்தபோது தம் திருக்கரங்களால் திருக்கோயில்கள் பலவற்றிற்கு அறப்பணிகள் செய்து புகழ்கொண்டார். குடந்தையிலுள்ள திருநாகேசுவரர் ஆலயத்தைப் புதுக்கித் திருப்பணிகள் நிறைவேற்றிய சிறப்பினால் இன்றும் அத்திருக்கோயிலில் சேக்கிழார் தம் திருவுருவச் சிலையினோடு, அவரைத் தம் மணி வயிற்றில் சுமந்த தாயார் அழகம்மையார் திருவுருவமும், சேக்கிழாருடன் பிறந்த அவர் இளவல் பாலறாவாயர் திருவுருவமும் வழிபாட்டில் இருந்து வருவதைக் காணுகின்றோம்.

சேக்கிழார் தாம் பிறந்த குன்றத்தூரிலும் நாகேசுவரர் ஆலயம் போன்றே அமைத்ததொரு சிவாலயமும் இன்று ''வட நாகேசுவரம்'' என வழங்கப்பட்டு வருகின்றது. சேக்கிழார் பிறந்த இல்லமும் இன்று குன்றத்தூரில் சேக்கிழார் திருக்கோயிலாகச் சிறப்புடன் இலங்கி வருகின்றது.

சில அருளாளருடைய திருக்கரங்கள் கோயில் அமைத்துச் சிறப்பினைப் பெறும், சில அருளாளருடைய திருக்கரங்கள் காவியம் எழுதிச் சிறப்பினைக் காணும். தம் திருக்கரங்களால் எண்ணற்ற கோயில்களின் திருப்பணியைச் செய்து சிறப்புற்ற



நம் சேக்கிழார் பெருமான் பாரெல்லாம் போற்றும் தெய்வமாக்காதையாம் ''பெரிய புராணம்'' எனும் ஒப்பற்ற அருள்நூலையாக்கவும் புண்ணியம் செய்தார் எனில் அவருடைய பெருமைக்கு ஈடேது?

மிகச்சிறந்த சிவனருட்செல்வராக விளங்கிய சேக்கிழார் பெருமானுக்குத் தில்லை அம்பலப் பெருமான் தாமே ''உலகெலாம்'' என அடி எடுத்துக் கொடுத்து திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணத்தைப் பாடச் செய்தார் என்றால், சேக்கிழாரால் அருளிச் செய்யப்பட்ட பெரிய புராணத்திற்கு ஈடாக எந்நூலை நாம் கூற முடியும்?

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்''

என்று ஆரம்பித்து இரண்டு காண்டங்கள், 13 சருக்கங்கள், 4253 பாடல்களால் திருத்தொண்டர் புராணத்தைப் பாடித் தில்லையில் ஆயிரங்கால் மண்டபத்தில், திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்த சித்திரை திருவாதிரை நாளில் அரங்கேற்றத் தொடங்கி மறு ஆண்டு சித்திரை திருவாதிரையில் தம் புராணத்தை நிறைவு செய்து முடித்தார் நம் சேக்கிழார் பெருமான்.

தம் திருநாவில் சரசுவதி தேவி வீற்றிருக்க ''வாக்கினாற் சொலவல்ல பிரான்'' ஆகிய சேக்கிழார் பெருமான் பாடியருளிய ஒப்பற்ற அருள்சரிதமே திருத்தொண்டர் புராணம் ஆகும்.

வெண்தாமரைப் பூவினை மறந்து, சங்கப் புலவர் பாவினை மறந்து, பிரமதேவன் நாவினை மறந்து, சேக்கிழார் தம் நாவில் குடி கொண்டாள் சரசுவதி தேவி என்று உமாபதி சிவம் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

சரசுவதி தேவி தம் நாவில் குடிகொள்ள சேக்கிழார் செய்தருளிய திருத்தொண்டர் புராணத்தில் ஒவ்வொரு சொல்லும் சரசுவதி கடாட்சம் பொருந்திய சொல்லாகத் திகழ்வதைப் பெரிய புராணத்தில் தொட்ட இடமெல்லாம் கண்டு கண்டு களிபேருவகை நாம் காணலாம்.

''மெய்காட்டும் அன்புடைய வில்லியார்'' என்கிறார் கண்ணப்ப நாயனாரை. ''பக்தி முதிர்ந்த பாலகனார்'' எனப் போற்றுகிறார் சண்டிகேசுவரரை. ''தூண்டுதவ விளக்கனையார்'' என்கிறார் திலகவதியாரை; ''சிலமார் பூசை செய்த திருத்தொண்டர்'' என்கிறார் இளையான் குடி மாற நாயனாரை. ''செய்வதற்கு அரிய செய்கை செய்த நற்றொண்டர்'' ''சிவன் கழல் புனை வீரர்'' எனப் போற்றுகின்றார் இயற்பகை நாயனாரை. ''சிவலோகம் உடையவர்தம் திருவாயில் முன்னின்று பவலோகம் கடப்பவர்'' என்று சிறப்பிக்கின்றார் நந்தனாரை.

தமிழில் உள்ள பல நூல்கள், வட மொழியிலிருந்து தமிழுக்குக் கிடைத்தன என்பதும், தமிழிலிருந்து வடமொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட ஒரு பெருமைமிக்க நூல் சேக்கிழார் அருளிய பெரிய புராணம் தான் என்பதும் கொண்டு, செந்தமிழ்ச்

செல்வராம் நம் சேக்கிழார் பெருமானின் பெருமையை நாம் ஓரளவு உணரலாம்.

தெய்வச்சேக்கிழார் பெருமான், திருத்தொண்டர் புராணம் பாட தில்லையம்பலப் பெருமானே ''உலகெலாம்'' என அடியெடுத்துக் கொடுத்தார் என்றால் பெரிய புராணம் உலகெலாம் போற்றும் ஒப்பற்ற காவியம் என்பதற்கு ஐயமும் உண்டா?

மூவுலகும் போற்றும் முதன்மையான காவியம் பெரிய புராணம்; ஆகவே தான் தம் காவியத்தின் முதல், நடு, கடை எனும் மூவிடங்களிலும் 'உலகெலாம்' எனும் சொல்லை அமைத்துச் சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார் எனப் பெரியோர்கள் பெரியபுராணத்தின் பெருமையைக் கூறுவர்.

உலகெலாம் போற்றும் திருத்தொண்டர் புராணத்தில் முதல், நடு, கடை எனும் மூவிடங்களில் ''உலகெலாம்'' எனச் சேக்கிழார் அமைத்துப் பாடியுள்ள அம்மூன்று அருட்பாடல்கள் பின்வருமாறு:

"உலகெலாம் உணர்ந் தோதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

"சோதி முத்தின் சிவிகை சூழ்வந்து, பார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றி நின்று
ஆதியார் அருள் ஆதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்"

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியவர் அவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்"

மூவுலகங்களும் போற்றும் அருள்நூல் மட்டுமல்ல; பெரிய புராணம் ஈரேழு பதினான்கு உலகங்களும் போற்றும் ஒப்பிலாத் தெய்வ நூல் என்று கூறும் தமிழ்ச்சான்றோர்கள் பெரிய புராணத்தில் 14 இடங்களில் இந்த ''உலகெலாம்'' என்னும் சொல் இடம் பெற்றிருப்பதாக உணர்த்துவதும் நமக்குக் களிபேருவகை தரும் அரியதொரு செய்தியாகும்.

இறைவனைப் பெறுவதே குறிக்கோளாகத் ''தொண்டு'' நெறி பற்றி வாழ்ந்தவர்கள் இறையடியார்கள். ''தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்பது ஔவை மூதாட்டியின் அருள் வாக்கு.

அத்தகைய தொண்டர்களின் பெருமையைப் - புலனைந்தும் வென்று செயற்கரிய செயல் புரிந்த திருத்தொண்டர்களின் பெருமையைப் பக்திச் சுவை நனிசொட்ட சொட்டப் பாடிய ஒப்பிலா அருட்செல்வர் நம் சேக்கிழார் பெருமான் ஆவார்.

ஐம்புலனை வென்ற பெரியவர்களான அடியவர் வரலாறு கூறுவதாலேயே திருத்தொண்டர் புராணம் ''பெரிய புராணம்'' என்று சிறப்பிக்கப் படுகின்றது. இராமாயணம், மகாபாரதம், கந்த புராணம் போன்ற நூல்கள் அளவால் மிகப் பெரியவை; ஆயினும் அவற்றைப் பெரியபுராணம் என்று நாம் சிறப்பிப்பது இல்லை. செயற்கரும் செயல் ஆவது, ஐம்புலன்களை வெல்வது ஆகும். அவ்வாறு ஐம்புலன்களை வென்று தம்மை இறைவன் அருட்பணிக்கு அர்ப்பணித்த உயர்ந்த குறிக்கோள் உடையவர்களாகிய அடியவர்களின் வரலாறு கூறும் நூல் என்பதாலேயே திருத்தொண்டர் புராணம் ''பெரிய புராணம்'' என்று சிறப்பிக்கப் படுகின்றது.

"மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்"


"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்"

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலா தொன்றிலார்
ஈர அன்பினில் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ"

என அடியார் பெருமையைத் தம்வாக்கில் வைத்துப் போற்றுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

அவரே திருவாரூர் இறைவர் திருவாக்கிலும் வைத்து



''பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இனபம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரைநீ அடைக சென்று''

என்று சுந்தரருக்கு அறிவுறுத்துகின்றார்.

இவ்வாறு அறிவுறுத்தப்பட்ட சுந்தரர் இறைவனார் அடியெடுத்துக் கொடுக்கப்பாடியதே ''திருத்தொண்டத் தொகை'' எனும் ஒப்பற்ற பதிகமாகும்.

''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும்
அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும்
அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு
அடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார்
விறல்மிண்டர்க்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு
அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே'

என்பது திருத்தொண்டத்தொகையின் முதற் பாடலாகும்.

இத்திருத்தொண்டத் தொகை திருப்பதிகமே சுந்தரருக்குப் பின்வந்த திருமுறைகள் தொகுத்தருளிய நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடவும், கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ''தொண்டர் சீர் பரவுவார்'' நம் சேக்கிழார் பெருமான் ''திருத்தொண்டர் புராணம்'' எனும் பெரிய புராணம் பாடவும் மூலகாரணம் ஆகியது என்பது ஈண்டு எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

சுந்தரர் அவதார நோக்கமே திருத்தொண்டத் தொகை அருளி அடியார் பெருமையை அவனியெலாம் போற்றச் செய்வது தான் என்பதை நம் சேக்கிழார் பெருமானே பெரிய புராணத்தில் எடுத்துக் காட்டி தம் தலைமேற் கொண்டு திருத்தொண்டத் தொகையினைப் போற்றுவதைக் கீழ் வரும் பாடல்களால் நாம் நன்கு உணரலாம்.

''மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சியில் கண்ணினார்''

''தம்பெருமான் கொடுத்தமொழி
முதல் ஆகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத்
தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தான் அருளும்
உணர்வு பெற உலகு ஏத்த
எம்பெருமான் வன்தொண்டர்
பாடி அவர் எதிர்பணிந்தார்''

''ஞாலம் உய்ய, நாம் உய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீலம்உய்ய திருத்தொண்டத்
தொகைமுன் பாட, செழுமறைகள்
ஓலம் இடவும் உணர்வு அரியார்
அடியார் உடன் நாம் உளது என்றால்
ஆலம் அமுது செய்த பிரான்
அடியார் பெருமை அறிந்தார் ஆர்?''

''வேறு பிறிது என்? திருத்தொண்டத்
தொகையால் உலகு விளங்கவரும்''

என்றெல்லாம் திருத்தொண்டத் தொகையைச் சேக்கிழார் பெருமான் சிறப்பித்துப் போற்றிப் பரவுவதைக் காணுகின்றோம்.

இத்தகைய சிறப்பிற்குரிய திருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டுதான் 63 தனியடியார்கள், 9 தொகை அடியார்கள் சரிதத்தைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணமாகப் பாடி உலகை விளங்கச் செய்திருக்கின்றார் என்றால் தெய்வச் சேக்கிழார் பெருமானின் பெருமையைப் போற்றிட உலகங்கள் யாவும் நன்றிக் கடன்பட்டுள என என்பது தெளிவு.

இந்த இருபதாம் நூற்றாண்டைச் சமத்துவக் காலம் என்று பரவுகின்றோம். இதனைக் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலேயே உணர்ந்து, தெளிந்து உலகம் யாவும் சகோதரத்துவத்துடன் வாழ மாபெரும் சமத்துவக் காவியமாகவே பெரியபுராணத்தை ஆக்கிப் பெருமை கொண்டுள்ளார் நம் சேக்கிழார் பெருமான்.

சிவபெருமானின் திருவடிகளை வழிபட்டுய்யும் நற்பேறுடைய அருளாளர் ஆகிய சிவனடியார்களிடையே குலம் பற்றிய உயர் தாழ்வுக்கு ஒரு சிறிதும் இடம் இல்லை.

> ''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம்
> கொண்டாலும்
> மன்னிய சீர் சங்கரன்தாள் மறவாமை பொருள்''

என வாழ்ந்த இறையடியார்கள் எல்லோரும் தாம் பிறந்த பண்டைக் குலத்தின் தொடர்பினை அறுத்து, இறைவனுக்கே தொண்டுபட்ட தொண்டர் குலத்தினர் ஆவார்கள்.

சிவனடியார்கள் அந்தணர் ஆயினும், புலையர் ஆயினும், வேந்தர் ஆயினும், வேடுவர் ஆயினும், வணிகர் ஆயினும், வேளாளர் ஆயினும், ஏகாலியர் ஆயினும், இடையர் ஆயினும், பாணர் ஆயினும் பரதவர் ஆயினும், சான்றார் ஆயினும், செக்கார் ஆயினும் அவர்களில் வேற்றுமை கிடையாது. அனைவரும் சமம். இத்தகைய சமத்துவத்தைச் சாற்றும் ஒப்பற்ற தமிழக வரலாற்றுப் பண்பாட்டுக் காவியம் பெரியபுராணம் ஆகும்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனும் சமத்துவத்தை நிலைநாட்டும் வகையில் பெரிய புராணத்தில் சேக்கிழார் பாடியுள்ள திருத்தொண்டர் திருக்குலங்களைப் பின்வருமாறு பட்டியல் இட்டுக் காட்டலாம்.

### ஆதிசைவ அந்தணர் நால்வர்.

1. புகழ்த்துணை நாயனார்
2. சடையனார்
3. இசைஞானியார்
4. நம்பியாரூரர்

### வேதியர் பன்னிருவர்

1. குங்குலியக் கலயர்
2. முருகனார்
3. உருத்திரப் பசுபதியார்
4. சண்டேசுவரர்
5. அப்பூதியடிகள்
6. திருநீல நக்கர்
7. நமிநந்தியடிகள்
8. திருஞான சம்பந்தர்
9. சோமாசி மாறர்
10. சிறப்புலி நாயனார்
11. கணநாத நாயனார்
12. பூசலார் நாயனார்

### முடிவேந்தர் அறுவர்

1. சேரமான் பெருமாள் நாயனார்
2. புகழ்ச்சோழர்
3. நெடுமாறர்
4. இடங்கழியார்
5. மங்கையர்க்கரசியார்
6. கோச்செங்கட் சோழர்

### குறுநில மன்னர் ஐவர்

1. மெய்ப்பொருள் நாயனார்
2. கூற்றுவ நாயனார்
3. நரசிங்க முனையரையர்
4. ஐயடிகள் காடவர்கோன்
5. கழற்சிங்க நாயனார்

### வணிகர் ஐவர்

1. இயற்பகை நாயனார்
2. அமர்நீதி நாயனார்
3. மூர்த்தி நாயனார்
4. காரைக்கால் அம்மையார்
5. கலிகம்ப நாயனார்

## வேளாளர் பதின்மூவர்

1. இளையான்குடிமாறனார்
2. விறல்மிண்டர்
3. மானக்கஞ்சாறர்
4. அரிவாட்டாயர்
5. திருநாவுக்கரசர்
6. ஏயர்கோன் கலிக்காமர்
7. மூர்க்க நாயனார்
8. சாக்கிய நாயனார்
9. சத்தி நாயனார்
10. வாயிலார் நாயனார்
11. முனையடுவார் நாயனார்
12. செருத்துணை நாயனார்
13. கோட்புலி நாயனார்

## இடையர் இருவர்

1. திருமூல நாயனார்
2. ஆனாய நாயனார்

## மாமாத்திரர் ஒருவர்

1. சிறுத்தொண்ட நாயனார்

## பிற மரபினர்

| | | |
|---|---|---|
| குயவர் | | திருநீலகண்ட நாயனார் |
| பாணர் | - | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| பரதவர் | - | அதிபத்த நாயனார் |
| வேடர் | - | கண்ணப்ப நாயனார் |
| சான்றார் | - | ஏனாதிநாத நாயனார் |
| சாலியார் | - | நேசநாயனார் |
| செக்கார் | - | கலிய நாயனார் |
| ஏகாலியர் | - | திருக்குறிப்புத் தொண்டர் |

ஊர்ப்புலைமை ஆன்ற தொழில் தாயத்தார்

ஒப்பிலவர் - திருநாளைப் போவார்.

யானைமேல் அமர்ந்துவந்த சேரமான் பெருமாள் நாயனார் என்ற முடியுடை மன்னன், திருநீறு பூசியதாக எண்ணி, உவர்மண் கோலம் பூண்டிருந்த ஒரு எளிய வண்ணானை வணங்கி ''அடிச்சேரன்'' என்று பணிந்த பெருமை மிகுந்த வரலாறு, நம் பெரிய புராணம் காட்டும் சமத்துவ வரலாறு ஆகும்.

பெரிய புராணம் பாடிப் பெரும்புகழ் கொண்ட சேக்கிழார் பெருமானையும், பெரிய புராணச் சுவடிகளையும் தம் பட்டத்துயானைமேல் ஏற்றித் தில்லைத்திருநகரின் மாடவீதிகளை வலம் வரச் செய்து, தானும் உடன் ஏறிச் சேக்கிழார் அமர்ந்திருக்கத் தான் நின்று இருந்து தன் இரு கரங்களாலும் கவரி வீசிச் சிறப்பித்தான் அநபாயச் சோழன் என்பதை நமக்கு வரலாறு காட்டுகின்றது.

''தொண்டர் சீர்பரவுவார்'' நம் தெய்வச் சேக்கிழார் ஈன்ற நம் தமிழ் மண்ணின் பெருமையே பெருமை. இன்று வைகாசி பூசம். (20.5.99) பொன்னம்பலக் கூத்தன் ''உலகெலாம்'' என அடி எடுத்து கொடுக்க உலகெலாம் உய்ய பெரியபுராணம் பாடியருளிய பெரும்புகழ் தெய்வச் சேக்கிழார் பொன்னம்பலவன் பொன்னடிகள் அடைந்த புண்ணியத்திருநாள். இந்நன்னாளில் சேக்கிழாரின் திருப்புகழ் போற்றிப் பரவி புண்ணியம் நாமும் பெற்று உய்வோமாக!

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகை
அடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய
விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடிபோற்றி".

★★★

### பெரிய புராணத்தின் பெருமை

காவியங்கள் பல திறத்தன. அவைகளுள் சிலவற்றில் உலகைக் காணலாம். சிலவற்றில் உயிரைக் காணலாம். சிலவற்றில் கடவுளைக் காணலாம். மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியங்கள் மிகச்சில. அச்சிலவற்றுள் பெரிய புராணமும் ஒன்று.

உலகு, உயிர், கடவுள் என்னும் மூன்றும் சேர்ந்த இடத்திலேயே இன்ப அன்பு வாழ்வு நிகழும். இன்ப அன்பு அற்ற வாழ்வு வாழ்வாகாது. அது வற்றல்மரம் போன்றது. பெரியபுராணத்தில் தமிழ் இன்ப, அன்பு வாழ்வும் யாண்டும் பொலிதல் வெளிப்படைமலை.

– திரு.வி.க.

# அருள்மிகு தாயார் போற்றி

### தமிழ் அருச்சனை - அருள் வேண்டுதல்

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில் ........................ அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும் சமூகத் தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன் னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள்பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உம் திருவடிகளில் மலர்தூவி வழிபாடு செய்கின்றோம்.

### அருள்மிகு தாயார் எட்டுப் போற்றிகள்

1. ஓம் அஞ்சிலைவல்லியே போற்றி
2. ஓம் உலகநாயகியே போற்றி
3. ஓம் கருந்தடங்கண்ணியே போற்றி
4. ஓம் கற்பகவல்லியே போற்றி
5. ஓம் தலைச்சங்கத் தமிழே போற்றி
6. ஓம் பெரியநாயகியே போற்றி
7. ஓம் மலர்க்கிழத்தியே போற்றி
8. ஓம் வைதேவியே போற்றி போற்றி

### அருள்மிகு தாயார் பதினாறு போற்றிகள்

1. ஓம் அஞ்சிலைவல்லியே போற்றி
2. ஓம் இந்திரையே போற்றி
3. ஓம் உய்யவந்தவளே போற்றி
4. ஓம் உலகநாயகியே போற்றி
5. ஓம் கருந்தடங்கண்ணியே போற்றி
6. ஓம் கற்பகவல்லியே போற்றி
7. ஓம் குலமாமகளே போற்றி
8. ஓம் சுடர்க்கொடியே போற்றி
9. ஓம் தலைச்சங்கத் தமிழே போற்றி
10. ஓம் திருமாமகளே போற்றி
11. ஓம் நங்கையே போற்றி
12. ஓம் நம்பிக்கை நாச்சியே போற்றி
13. ஓம் பவளவல்லியே போற்றி
14. ஓம் பெரியபிராட்டியே போற்றி
15. ஓம் மலர்க்கிழத்தியே போற்றி
16. ஓம் வைதேவியே போற்றி போற்றி

### அருள்மிகு தாயார் 108 போற்றிகள்

1. ஓம் அஞ்சிலைவல்லியே போற்றி
2. ஓம் அநந்தநாயகியே போற்றி
3. ஓம் அபிடேகவல்லியே போற்றி
4. ஓம் அம்புயவல்லியே போற்றி
5. ஓம் அமுதகடவல்லியே போற்றி
6. ஓம் அமுதவல்லியே போற்றி
7. ஓம் அரங்கநாயகியே போற்றி
8. ஓம் அரவிந்தவல்லியே போற்றி
9. ஓம் அரிலக்குமியே போற்றி
10. ஓம் அலர்மேல் மங்கையே போற்றி
11. ஓம் அழகியவல்லியே போற்றி
12. ஓம் அன்னநாயகியே போற்றி
13. ஓம் அன்னையே போற்றி
14. ஓம் ஆதிநாதவல்லியே போற்றி
15. ஓம் இந்திரையே போற்றி
16. ஓம் இலக்குமிநாச்சியே போற்றி
17. ஓம் இரமாமணியே போற்றி
18. ஓம் இறைவியே போற்றி
19. ஓம் உய்யவந்தவளே போற்றி
20. ஓம் உருப்பிணி நங்கையே போற்றி
21. ஓம் உலகநாயகியே போற்றி
22. ஓம் உறையூர்நாச்சியே போற்றி
23. ஓம் என்னைப் பெற்றதாயே போற்றி
24. ஓம் ஒண்டொடியாளே போற்றி
25. ஓம் கடல் மகளே போற்றி
26. ஓம் கண்ணபுரநாயகியே போற்றி
27. ஓம் கலியாண வல்லியே போற்றி
28. ஓம் கருந்தடங்கண்ணியே போற்றி
29. ஓம் கலைவாணியே போற்றி
30. ஓம் கற்பகவல்லியே போற்றி
31. ஓம் கனகவல்லியே போற்றி
32. ஓம் காடுறைவல்லியே போற்றி
33. ஓம் குலமாமகளே போற்றி
34. ஓம் குழைக்காதுவல்லியே போற்றி
35. ஓம் குழந்தைவல்லியே போற்றி
36. ஓம் குறுங்குடிவல்லியே போற்றி
37. ஓம் கோதைநாச்சியே போற்றி
38. ஓம் கோமளவல்லியே போற்றி

39. ஓம் கோளூர் வல்லியே போற்றி
40. ஓம் சண்பகவல்லியே போற்றி
41. ஓம் சத்தியபாமையே போற்றி
42. ஓம் சனகியே போற்றி
43. ஓம் சாரநாயகியே போற்றி
44. ஓம் சீதையே போற்றி
45. ஓம் சீவரமங்கையே போற்றி
46. ஓம் சுடர்க்கொடியே போற்றி
47. ஓம் சுந்தரவல்லியே போற்றி
48. ஓம் செங்கமலவல்லியே போற்றி
49. ஓம் செல்வத் திருக்கொழுந்தே போற்றி
50. ஓம் செல்வியே போற்றி
51. ஓம் சௌந்தரிய வல்லியே போற்றி
52. ஓம் தஞ்சை நாயகியே போற்றி
53. ஓம் தடங்கண்ணியே போற்றி
54. ஓம் தலைச்சங்கத் தமிழே போற்றி
55. ஓம் திங்கள் வினைதீர்த்த திருவே போற்றி
(சந்திர சாப விமோசனவல்லி)
56. ஓம் திருமாமகளே போற்றி
57. ஓம் திருவே போற்றி
58. ஓம் தேவியே போற்றி
59. ஓம் நங்கையே போற்றி
60. ஓம் நப்பின்னையே போற்றி
61. ஓம் நம்பிக்கை நாச்சியே போற்றி
62. ஓம் நிலமங்கைவல்லியே போற்றி
63. ஓம் பங்கயச் செல்வியே போற்றி
64. ஓம் பத்மாசன நாச்சியே போற்றி
65. ஓம் பத்மாமணி நாச்சியே போற்றி
66. ஓம் பரிமளவல்லியே போற்றி
67. ஓம் பவளவல்லியே போற்றி
68. ஓம் பால்மொழியே போற்றி
69. ஓம் பாவையே போற்றி
70. ஓம் புருடோத்தமநாயகியே போற்றி
71. ஓம் புளிங்குடி வல்லியே போற்றி
72. ஓம் பூங்கோவல் நாச்சியே போற்றி
73. ஓம் பூமகளே போற்றி
74. ஓம் பூமிதேவியே போற்றி
75. ஓம் பூர்வா தேவியே போற்றி
76. ஓம் பூவார் திருமகள் நாச்சியே போற்றி
77. ஓம் பெண்கனியே போற்றி
78. ஓம் பெண்மைக் காப்பே போற்றி
79. ஓம் பெரிய பிராட்டியே போற்றி
80. ஓம் பெருஞ்செல்வ நாயகியே போற்றி
81. ஓம் பெருந்தேவியே போற்றி
82. ஓம் பொற்கொடி நாச்சியே போற்றி
83. ஓம் பொற்றாமரையாளே போற்றி
84. ஓம் பொன்னே போற்றி
85. ஓம் மட்டவிழும் குழலியே போற்றி
86. ஓம் மடவரல்மங்கையே போற்றி
87. ஓம் மண்மகளே போற்றி
88. ஓம் மதுரவேணியே போற்றி
89. ஓம் மரகதவல்லியே போற்றி
90. ஓம் மலர்க்கிழத்தியே போற்றி
91. ஓம் மலர்க்குழலியே போற்றி
92. ஓம் மாசறுமணியே போற்றி
93. ஓம் மாயா தேவியே போற்றி
94. ஓம் மிதிலைச் செல்வியே போற்றி
95. ஓம் மெல்லியலே போற்றி
96. ஓம் மென்னோக்கியே போற்றி
97. ஓம் மேகவல்லியே போற்றி
98. ஓம் மையகண்ணியே போற்றி
99. ஓம் மோகூர்வல்லியே போற்றி
100. ஓம் வகுளவல்லியே போற்றி
101. ஓம் வாசலக்குமியே போற்றி
102. ஓம் வேள்விப்பொருளே போற்றி
103. ஓம் விமலையே போற்றி
104. ஓம் வித்துவக்கோட்டு வல்லியே போற்றி
105. ஓம் வேதவல்லியே போற்றி
106. ஓம் வேளுக்கை வல்லியே போற்றி
107. ஓம் வைகுந்தவல்லியே போற்றி
108. ஓம் வைதேவியே போற்றி போற்றி

பாடல் - அருள்மிகு தாயார்

நிறைவாக, அவ்வத் தலத் தாயாருக்குரிய ஒரு பாடலை ஓதி, போற்றியை நிறைவு செய்யலாம்.

**வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்**

...................... தாயார் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்களம் உண்டாகுக.

★★★

# ஸ்ரீவைணவம்

- திருமதி இரா. பத்மாவதி, பி.ஏ., பிஎஸ்.சி., எம்.எட்.,

வைணவன் என்றால் விஷ்ணுவை வழிபடுப வர், விஷ்ணுவின் அருள் பெற்றவர் என்று பொருள். விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் பரந்த கடவுள் என்று பொருள்.

**தத்துவங்கள் மூன்று**

நமது சமயம் போதிக்கும் தத்துவங்கள் மூன்று. அவை சித்து, அசித்து, ஈசுவரன் என்பனவாம். சித்தா வது அறியும் தன்மையுள்ள உயிர். அசித்தாவது அறி வுக்கு இடமற்ற பொருள். ஈசுவரன் இறைவன். இவை மூன்றும் தனித்தனி இயல்புடைய வேறு வேறு பொருள்கள். இவை ஒன்றுடன் ஒன்று இணைந்து எக்காலத்தும் தம்தம் இயல்பை விடா மல் திகழ்கின்றன என்பதே நம் சமயக் கருத்து. இதுவே விசிஷ்டாத்வைதம்.

சித்தாகிற உயிர், அசித்தைத் தன் உடம்பாகக் கொண்டு இருக்கிறது. அதுபோல இறைவன் அசித் தோடு கூடியுள்ள, சித்தைத்தன் உடம்பாகக் கொண்டு இருக்கிறான். உயிர் இன்றி, உடல் இல்லை. அவ்வாறே இறைவன் இன்றி, அவனுக்கு உடம் பாய் உள்ள சித்தும், அசித்தும் இயங்க முடியாது.

ஆகவே உடலோடு இருக்கும் உயிர் அவன் தாளினைப் பற்றி வாழவேண்டும் என்பர் பெரி யோர். இம்மூன்று தத்துவங்களையே முக்கோலாக அதாவது திரிதண்டமாகக் கொண்டு வைணவத் துறவிகள் அணிந்து வரலாயினர்.

**ஆழ்வார்களும் எம்பெருமானாரும்**

வைணவ சமயத் தத்துவங்களை உலகிற்கு உபதேசித்து எங்கும் பரவச் செய்தவர்கள் சடகோபர் முதலான ஆழ்வார்களும், இராமாநுஜர் முதலிய ஆசாரியர்களும் ஆவர்.

ஆழ்வார்கள் இவ்வுலக இருள் நீங்க வந் துதித்தவர்கள், இறைவன் என்ற மேலொரு பொரு ளும் இல்லா மெய்ப்பொருளை அனுபவித்து, அனு பவித்து, அவ்வனுபவம் உள்ளடங்காமல் பெருக் கெடுத்த பக்தி வெள்ளமே 'அருளிச் செயல்கள்' - திவ்வியப் பிரபந்தங்கள் எனப்படும். இப்பிரபந்தங் களை அருளிச் செய்து, தீதில் நன்னெறியாகிய ஞானச் சுடர் விளக்கினை ஏற்றினர். அச்சுடர் விளக்கினுக்குத் தூண்டுகோல்கள் போன்ற வியாக்கியானங்கள் மூலமாக பக்தர்களுடைய உள்ளங்களில் ஞானம் பிரகாசிக்கச் செய்தவர்கள் - செய்பவர்கள் - நம் ஆசாரியர்கள்.


ஆழ்வார்களுள்சிறந்தவராக நம்மாழ்வார் போற்றப்படுகிறார். மற்றைய ஆழ்வார்களை இவருக்கு அங்கங்கள் என்பர். இவர் வேத தத்துவங் களைத் தெளிவாகவும், அழகாகவும் பக்தி வெள்ளம் பெருகச் செந்தமிழ் வேதம் என்று போற்றப்படும் திருவாய்மொழியை அருளிச் செய்திருக்கிறார். இவ ரைத் திருவாய்மொழியை ஈன்ற தாய் என்றும்; ஸ்ரீராமானுஜரை இதத்தாய் (வளர்ப்புத் தாய்) என்றும் போற்றுகிறோம்.

ஸ்ரீ வைணவ சமயத்தினை ஆழ்வார்களின் நெறியில் எங்கும் பரவச் செய்த பெருமை ஸ்ரீராமானுஜரைச் சார்ந்ததாகும். பல நாள் முயன்று, தம் ஆசாரியரான திருக்கோட்டியூர் நம்பியிடம் பெற்ற திருமந்திரத்தின் பொருளை, அவர் கட்டளையை மீறித் தாம் நரகம் செல்லினும், மற்றவர்கள் உய் யட்டும் என எண்ணி, திருக்கோட்டியூர்த் திருக் கோவிலின் மீதேறி எல்லோரையும் கூவி, அழைத்து உபதேசித்தார். திருமால் சந்நிதியில் ஜாதி வேறு பாடுகளோ, ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வோ கிடையாது என்று கருதியவர் எம்பெருமானார். அரிஜனங்களைத் திருக்குலத்தார் என அழைத்து, அவர்களும் மேல் கோட்டைக் கோயிலிலிருக்கும் செல்லப்பிள்ளையை வருடத்திற்கு மூன்று நாட்கள் தரிசிக்கும்படியான ஏற்பாட்டைச் செய்தார்.

**பிரபத்தி மார்க்கம்**

இறைவன் திருவருளை அடைய ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய நெறிகள் உள்ளன. இம்மார்க்கங்களைக் காட்டி லும், சரணாகதி நெறிதான் சிறந்தது. இந்த பிரபத்தி அல்லது சரணாகதி நெறியை கண்ணன் உபதேசித் துள்ளான். இதனைத் 'தீதில் நன்னெறி' என்றும், கீதையின் 'செம்மைப் பொருள்' என்றும் கூறுவர்.

''உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்! கண்ணனே!' என்று நம்மாழ்வார் கூறியபடி எல்லாவற்றையும் கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்தல் வேண்டும்.



தன்னைச் சரணடைந்த பிரகலாதனைப் பல துன்பங்களிலிருந்து விடுவித்ததுமன்றி, தூணிலும் இருப்பேன் எனத் தூணைப்பிளந்து நரசிம்ம ரூபராய்க் காட்சி அளித்தது நாம் அனைவரும் அறிந்ததே.

திருமால், முதலையின் வாயிலே அகப்பட்ட கஜேந்திரனின் 'ஆதிமூலமே' என்ற அபயக்குரலைக் கேட்டு 'கருடவாகனராய்க் காட்சி தந்து மோட்சம் அளித்தார்.

இராமாவதாரத்தில் தன்னைச் சரணடைந்த விபீடணனைப் பகைத்தவனின் சோதரன் என்றும் விலக்காது அடைக்கலம் அளித்தார்.

திரௌபதியைத் துச்சாதனன், அரசவையில் துகிலுரிந்த போது, திரௌபதி ''கண்ணனே கதி!'' என்று இருகைகளையும் சிரமேற் கூப்பி, தன்னைப் பாதுகாக்கும் முயற்சியைக் கைவிட்டு,

'சங்கு சக்கர கதா பாணே!
துவாரகா நிலையா! அச்சுதா!
கோவிந்தா! புண்டரிகாட்சா!
ரட்சமாம்! சரணாகதம்!'

என, அவனிடம், சரணாகதி செய்ய, அவன் அருளால் துகில் வளர்ந்தது, கடல்களில் அலைகளைப் போல்!

## புருஷார்த்தம்

பகவத் கைங்கர்யத்தைக் காட்டிலும், பாகவத கைங்கர்யமே சாலச்சிறந்தது என்பது ஸ்ரீ வைணவ சமயத்தின் கொள்கை. இதன் சிறப்பினை அறிந்தே திருமங்கையாழ்வாரும்,

'ஞானத்தின் ஒளி உருவை நினைவார்
என் நாயகரே'

என்றும்,

''ஆர் எண்ணும் நெஞ்சுடையார், அவர்
எம்மை ஆள்வாரே''

என்றும் அருள்கிறார்.

திருமாலின் திருவருளைப் பெறப் பிராட்டியைப் பற்றுக் கோடாக அதாவது புருஷாகாரமாகக் கொள்ளுதல் நலம். பிராட்டியார் நமக்காக இறைவனிடம் வாதாடி அருள்பாலிக்கச் செய்கிறாள். உடையவர் திருவரங்கத்தில் பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீரங்கநாச்சியாருடன் ஸ்ரீரங்கநாதர் எழுந்தருளிய சமயத்தில் சரணாகதி கத்யம் சாதித்தார்.

## வைணவமும், மகளிரும்

இராமாயணத்தில் சபரித்தாயார் இராமனின் மேல் வைத்த பக்தியால், சிறந்த பழங்களாகத் தேர்ந்து எடுத்து, அவற்றை ருசி பார்த்து நன்றாக உள்ளனவற்றை ஸ்ரீராமருக்குக் கொடுப்பதற்காகத் தனியே வைத்தனள் என்றால், அவள் பக்தியை என்னென்பது!

ஸ்ரீ உறங்காவில்லி தாசரின் தேவியான பொன்னாச்சியாரின் வீட்டில் ஒருநாள் இரவு இரு வைஷ்ணவர்கள் புகுந்து, அவர் ஒரு பக்கமாய் ஒருக்களித்து சயனித்திருந்தபோது, அவர் ஒரு பக்கம் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கொண்

டார்களாம். இது தெரிந்தும் பொன்னாச்சியார் தம் ஆபரணங்கள் பாகவத கைங்கர்யத்திற்கே பயன்படுவ தென மற்றொரு பக்க ஆபரணங்களையும் எடுக்கட்டுமே என்று மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாராம். இந்த அம்மையாரின் பாகவத பக்தியைக் கூறவும் இயலுமோ!

திருமங்கை மன்னனைப் பகவத் கைங்கரியத்திலும் பாகவத கைங்கரியத்திலும் ஈடுபடச் செய்த பெருமை நம் குமுதவல்லித் தாயாரைச் சார்ந்ததாகும்.

வல்லப தேவ பாண்டியனின் மந்திரி, செல்வ நம்பி என்பவர்தம் தேவியார் சிறந்த பாகவத பக்தர். அவர் செல்வநம்பி வெளியூர் சென்றிருந்தபோது யாத்திரை வாசிகளாக வந்த பக்தர்களுக்கு விதைக்கும் நெல்லையும் எடுத்துத் ததியாராதனை செய்து விட்டார். ஊர் திரும்பிய செல்வநம்பி, 'விதை நெல் எங்கே?' என்று கேட்க தேவியார் அதனை, பரம பதத்தில் விதைத்து விட்டதாகக் கூறினார்.

உலகம் புகழும் திருப்பாவை பாடி, பாமாலையுடன் பூமாலையும் சூடிக் கொடுத்து, தான் மட்டும் பேறு பெற்றால் போதாது என நினைத்த ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ வில்லிபுத்தூர் மகளிரையும் மார்கழி நோன்பு நோற்க வரும்படி பொழுது புலருமுன்னே துயில் எழுப்பினாள். அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு நந்தகோபன் மாளிகைக்கு ஏகி, நப்பின்னைப் பிராட்டியைப் புருஷாகாரமாய்க் கொண்டு,

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமேயாவோம்! உனக்கே நாம் ஆட்
செய்வோம்!
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்!"

என்று இப்பிறவியில் மட்டும் அல்ல, ஏழேழ் பிறவிக்கும் உன் அடிமையாக இருக்க வேண்டும் எனக் கண்ணனைப் பிரார்த்தித்தாள்.

வைணவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை 'வைணவ ஜனதோ' என்ற பாடல் கூறுகிறது. அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார் நம் காந்தியடிகள்.

### வைணவர் யார்

எவன் பிறர் துயரம் கண்டு மனம் உருகுகின்றானோ, எவன் அத்துயரைத் தன் துயராகக் கருதி உதவி செய்யவிரைகின்றானோ, அவன்தான் உண்மையான வைணவன் எனக் கருதுவார்கள்.

அனந்தாழ்வானின் சிஷ்யர் ஒருவர் சிறந்த வைணவன் எப்படி இருப்பான் என்று அவரை வினவினாராம். அதற்கு அவர் ஒரு சிறந்த வைணவன்,

"கொக்கு போல இருப்பான்
கோழி போல் இருப்பான்
உப்பைப் போல் இருப்பான்
உம்மைப் போல் இருப்பான்"

என்றாராம்.

### கொக்கு

கொக்கு வெண்மையாய் இருக்கும். "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருந்து பெரிய மீனைப் பற்றும். அதைப் போல ஸ்ரீ வைணவம் உள்ளவன் தூய்மையுடையவனாய், நல்லாசிரியர்களைத் தேடிச் சிறந்த புருஷார்த்தத்தை விரும்புவான்.

### கோழி

கோழி, குப்பையைச்சீய்த்து தன் ஜீவனத்துக்கு வேண்டிய தானிய மணிகளைத் தானும் உண்டு தன் குஞ்சுகளுக்கும் கொடுக்கும். அதுபோல ஸ்ரீவைணவன் சாஸ்திரங்களை துருவித் துருவி ஆராய்ந்து பிறருக்கும் வழங்கி தானும் அனுபவித்து மகிழ்வான்.

### உப்பு

உப்பு, உணவுப் பொருளில் கரைந்து, உண்பவர்களுக்குச் சுவை கொடுக்கும். அதுபோல வைணவத் தொண்டிலே தன்னை முழுக்க அர்ப்பணித்துக் கொண்டு கைங்கரியமே இலட்சியமாக வாழ்வான்.

வைதீக தர்மங்கள் தலைசாய்ந்த போது பகவான் நாராயணன் பத்ரியில் நாராயண ரிஷியாக அவதரித்து தன், அம்சமான நரனுக்கு சகல வேத சாரமான திருமந்திரத்தையும், அதன் பரமார்த்தங்களையும் உபதேசித்தார்.

### பஞ்ச ஸம்ஸ்காரம்

ஒரு வைணவன் கடைபிடிக்க வேண்டிய ஐந்து விதிமுறைகள் பஞ்ச ஸம்ஸ்காரம் எனப்படும். அவை 1. தாபம், 2 புண்ட்ரம், 3. நாமம், 4. மந்திரம், 5. யாகம்.

### தாபம்

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி, திகழ் திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே, ஒரு ஆசாரியரைக் கொண்டு ஒற்றுண்டு நிற்றல்.

### புண்ட்ரம்

திரு மண் காப்பு அணிதல்

### நாமம்

ராமானுஜதாசன் என்ற தாஸ்ய நாமத்தைத் தன் பெயரோடு சேர்த்துக் கொள்ளுதல்.

### மந்திரம்

ஒரு ஆசாரியரின் திருவாக்கால் மந்திர உபதேசம் பெறுதல்.

### யாகம்

சித்திர வடிவமாக, அல்லது விக்கிரக வடிவமாக உள்ள எம்பெருமானை ஆராதனை செய்தல்.

பிறப்பில் வேற்றுமை காணா வைணவம்

வைணவர் யாராயினும் எந்த சாதியைச் சேர்ந்தவராயினும் அவர்களுள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேற்றுமை இன்றி, சக்கரத்தண்ணலின் அடியார் தம் அடியார் நாம் அனைவரும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்க வேற்றுமையில் ஒற்றுமையும், சமத்துவ மனமும், இன்றைக்கு சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே வைணவ சமயத்தில், வேர் ஊன்றி பரவிக் கிடந்ததை அறிகிறோம்.

ஏழை ஏதலன், கீழ் மகன் என்னாது குகனோடு தோழமை கொண்டார் இராமன்.

எம்பெருமானார் ஹரிஜனங்களைத் 'திருக் குலத்தார்' என அழைத்து அவர்களுக்கு, மேலக் கோட்டை கோயிலில் சேவை சாதிக்கும் செல்லப் பிள்ளையை வருடத்திற்கு மூன்று நாட்கள் தரிசிக்கும்படியான ஏற்பாட்டைச் செய்தார். சமரச சன் மார்க்கிகள் இதை கவனிக்க வேண்டும்.

### வைணவனின் இலக்கணங்கள்

சிலர் ''இருந்தால் கொடுப்பேன், இல்லையே'' என்பர். இருந்தால் கொடுப்பது சிறப்பல்ல; இருப்பதைக் கொடுப்பது அல்லது இருப்பதில் கொடுப்பது அதுவே சிறந்த வைணவ இலக்கணம்.

நாம் இறைவனிடம் உறுதியான நம்பிக்கை கொள்ள வேண்டும். பகவத் பக்தி, பாகவத பக்தியாய் மலர வேண்டும். மகளிருக்குக் கருணை காட்டும் தன்மையும் சேவை மனப்பான்மையும் இயற்கையாகவே நமக்கு வேண்டும்.

மாதர்களாகிய நாம் திட நம்பிக்கையுடன் இறைவனை வழிபடுதல் வேண்டும். நம் வீட்டுக் குழந்தைகளுக்குப் பாலுடன் தெய்வ பக்தியையும் ஊட்டி வளர்க்க வேண்டும். 'தொட்டிலை ஆட்டுங் கை தொல்லுலகை ஆளும் கை!' என்பர். நாம் குழந்தைகளின் தூயமனமாகிய நிலத்திலே, பக்தியாகிய வித்தை இட்டு, அடிக்கடி பக்த சிரோன் மணிகளின் கதைகளைத் தண்ணீராகப் பாய்ச்ச வேண்டியது நம் தலையாய கடமையாகும். இதனால் நம் குடும்பம் மட்டுமின்றி நம் நாடே நலனடையும். நாம் துன்பம் வந்துற்ற காலை வருந்தாமலும் இன்பம் வந்துற்ற காலை மகிழ்ச்சியை அடக்கித் துள்ளாமலும், 'எல்லாம் அவன் செயல்' என எண்ணி, ஆறி இருக்க உதவுவது இறை பக்தியாகும்.

நமது வைணவத்தாய்மார்கள் தங்கள் செல்வச் சிறார்களுக்கு, நமது திவ்வியப் பிரபந்தங்களில் வரும் நல்ல திருநாமங்களையும் ஆசாரியர்களுடைய திருப் பெயர்களையும் இட்டு வழங்கி வர வேண்டும். அப்படி இல்லாமல் நாகரீகம் எனக்கருதிப் பலர் வெற்றுச் சொற்களை இட்டு வழங்குகின்றனர். வைணவர்களாகிய நாம் நம் வீட்டில் நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தை வைத்து ஓதிவர வேண்டும். சிறுவர் சிறுமிகட்குக் கற்றுத்தர வேண்டும்.

வைணவ மகளிர் பகவானுக்கும், பாகவதர்களுக்கும் தொண்டு பூண்டு வாழ்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். பாகவத அபிமானம் பெரும்பேறு என்றும், பாகவத அபசாரம் பெருங் குற்றம் என்றும் நன்குணர்ந்து அன்பும், பண்பும் கொண்டு ஒழுக வேண்டும்.

''அடியார்கள் வாழ! அரங்கநகர் வாழ!
சடகோபன் தண்தமிழ் நூல் வாழ! - கடல்
சூழ்ந்த
மண்ணுலகம் வாழ! மணவாள மாமுனியே!
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்!''

# கம்பரின் இராமாவதாரம்

**- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்**

### 3. முனி பின்போன இருவர்

விசுவாமித்திரர் வந்ததைக் கண்ட தசரதன், தன் உலகத்திற்கு வந்த பிரமனை எதிர் கொண்டழைத்த தேவேந்திரன் மாதிரி அழைத்து உபசரித்தான். உலகத்தைப் படைத்த பிரமனை நிகர்த்தவர் திரிசங்கு உலகம் படைத்த விசுவாமித்திரர். தசரதனோ சம்பராசுரன் என்பவன் இந்திரலோகத்தை ஆக்ரமித்துக் கொண்டு, தேவேந்திரனை விரட்டிய காலத்தில் சம்பராசுரனைக் கொன்று தேவேந்திரனுக்கு அரசைத் திருப்பிக் கிடைக்கச் செய்த ராஜேந்திரன். எனவே இந்த இந்திரன் இந்த பிரமனை எதிர் கொண்டழைத்தான் என்றார்.

மாமுனிவர் வந்த மகிழ்ச்சியில் தயரதனது மார்பு பூரிக்க அவனது மார்பிலே கிடந்த முத்தாரம் முன்னால் வர, அதனுடைய ஒளிகண்டு சூரியன் மேகத்தினூடே மறைந்துக் கொண்டான் என்கிறது கவிஞனின் வாக்கு, மாலையின் ஒளி கண்டு சூரியன் மறையவில்லை. தசரதன் சூரிய வம்சத்தின் மகனன்றோ! விசுவாமித்திரன் தயரதனிடம் ஏதோ கேட்கப் போகிறான் என்பதை முன் கூட்டி அறிந்து கொண்ட சூரியன், தசரதன் அது கேட்டு வேதனையடைவான். தன் குலத் தோன்றலான தசரதன் படக்கூடிய வேதனையான நிலையைக் காணத் தயங்கிய சூரியன், தன் முகத்தை மேகத்தினூடே மறைத்துக் கொண்டான் என்கிறார் உரை ஆசிரியர்.

''எம்பெருமானே! தாங்கள் இங்கு எழுந்தருளியது என் குலத்தவர் செய்த புண்ணியம்'' எனக் கூறி வரவேற்கிறான் தசரத மகாராஜன். ''அரசனே! என் போன்ற முனிவரும் தேவரும் (விசுவாமித்திரருக்கு இன்னும் தன் முனைப்பு உள்ளது என்பதுடன் முனிவர்களுக்குப் பின் தான் தேவர்கள் என்று தவத்தின் வலிமையைப் பேசுகிறார் முனிவர்) கவலை வந்தால் எங்கு போவோம்! கைலையில் சிவபெருமானையும், பாற்கடல் பரந்தாமனையும், பிரமதேவனையும் தேவேந்திரனையும் அடைவோம். யாவரும் கைவிட்டு விட்டால் அயோத்தியில் உள்ள உன்னிடம் தானே வருவோம்'' என்கிறார்.

அரக்கர்கள் எவர் வந்தாலும் அடங்கி விடக் கூடியவன் இந்திரன். ஆனால் மும்மூர்த்திகளும் விசுவாமித்திரரை கைவிடுவார்களா? என்றால் கம்பன் இராமபிரானை மும்மூர்த்திகள் சேர்ந்த ஒரே மூர்த்தியாகக் கண்டிருக்கிறான். **மலரின் மேல் ஐயன் நீ** (பிரமன்), **ஆழிவாழ் அமலன் நீ** (திருமால்), **தீவினை தெறும் தேவு நீ** (பாவநாசனான சிவபெருமான்) என சுக்கிரீவன் வாக்கிலும், **''மூவர் நீ முதல்வன் நீ''** என வாலியின் வாக்கிலும், இராவண சபையில், ''ஆதி நடு முடிவில்லாத ஒரு பரம் பொருள், கைலையிலிருந்து தன் சூலத்தைக் கைவிட்டும், ஆலிலையிலிருந்த ஐயன் தன் சங்கு சக்கரங்களைத் துறந்தும், தாமரையிலிருந்த பிரமன் தனது கமண்டலத்தையும் விட்டு அயோத்திக்கு இராமபிரானாக வந்துள்ளார்'' என அனுமன் வாக்கிலும் வைத்தான்.

மும்மூர்த்திகளும் சேர்ந்து இராமபிரானாக வந்து விட்டதால், அங்கெல்லாம் காண முடியாது அயோத்தி வந்தேன் என்றார்.

என்னனைய முனிவரும் இமையவரும் இடையூறு
ஒன்று உடையரானால்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்:
பாற்கடலும்: பதுமபீடத்
தன்னகரும்: கற்பகநாட்டு அணி நகரும்:
மணி மாடஅயோத்தி என்னும்
பொன்னகருமல்லாது புகலுண்டோ! இகல்
கடந்த புலவு வேலோய்!

மும்மூர்த்திகளும் கைவிட்டாலும் அயோத்தி அதிபதியான நீ கைவிடமாட்டாய். அது மட்டுமல்ல, தேவேந்திரனுக்கே மீண்டும் அரசு கிடைக்கச் செய்தாய்! நீ இட்டபிச்சை தானே தேவேந்திரன் இன்று பதவியிலிருப்பது!'' என மற்றொரு புகழ் மாலையை விசுவாமித்திரர் போட்டுவிட, தசரதன் களிப்பெனும் கடலில் மூழ்கி, ''தங்களுக்கு என்ன வேண்டும்?'' எனக் கேட்டுவிட்டார்.

விசுவாமித்திரர் இன்னது வேண்டும் எனக் கேட்ட, அந்தப் பாடல், சொற்கள் மாற மாற, என்னென்னவோ நினைவுகளை உண்டாக்குகின்றன. **தருவனத்துள்** எது நினைத்தாலும் தரும் வனம் என்ற சித்தாச்சிரமத்தில் **யான் இயற்றும்** நான் செய்யும் (நான் என்ற தன்முனைப்பு இன்னும் உள்ளது என்பதைக் காட்டுகிறது). **தவவேள்விக்கு** அவ

வேள்வியல்ல, நல்லதவவேள்வி. அதற்கு **இடையூறு**. நல்ல காரியத்திற்குத் தன்னுடைய அரசாங்கத்தில் தடை என்பதைக் கேட்டு தசரதன் திடுக்கிடுகிறான். **தவஞ் செய்வோர்கள் வெருவரச் சென்றடையும் காம வெகுளி என்ன நிருதர்** தவஞ் செய்வோர்களைக் கெடுப்பது ஆசையும் கோபமும் மாதிரியான அரக்கர். ஆசை என்பது பெண்ணுக்கும் கோபமென்பது ஆணுக்கும் ஆனபடியால், வேள்வியை அழிக்க தாடகை போன்ற பெண்களும் உண்டு எனத் தொனிப் பொருள் வைத்தார். தாடகை போன்ற பெண்டிரும் உள்ளனர் என்றால் பெண் கொலை செய்ய தரும மூர்த்தியான தசரதன் வெறுக்கலாமல்லவா? எனவே தொனிப் பொருளாக வைத்தார். **இடை விலக்காவண்ணம் செருமுகத்துக்காத்தி** என்ற போது அரக்கரிடமிருந்து போர் செய்து எனது வேள்வியைக் காப்பாயாக! என முனிவர் கேட்கிறார் என எண்ணினார் தசரதர். **என நின் சிறு** என்ற போது தன் வேள்வியைக் காக்கச் சிறுபடையை வேண்டுகிறாரோ எனத் தசரதன் எண்ணும்போது **சிறுவர்** என்றார்; சந்தோஷக்கடலில் மூழ்கியிருந்த தசரதரை **வர்** என்ற சொல் தொடர் சந்தோஷக்கடலை வற்றடித்து விட்டது. **நால்வ** என மேலும் கூறும் போது நாலு மக்களையும் கேட்கிறாரோ என தசரதருடைய வேதனை உச்ச நிலையடைகிறது. **நால்வரினும்** என்ற போது ''நல்ல வேளையாக நால்வரையும் கேட்கவில்லை. ஓரிருவரைக் கேட்டாலும் கொடுத்து விடலாமே! எனத் தசரதர் எண்ணிய போது **கரிய** என்ற வார்த்தையின் போது தசரதச் சக்கரவர்த்தியின் கண்களுக்கு விசுவாமித்திரர் கன்னங் கரேல் என்ற யமனாகவே காட்சி கொடுத்தார். கரிய செம்மல் எனக் கூற, பரதனும் **கரிய செம்மல்** தானே, அவனை அனுப்பி விடலாமோ எனத் தசரதர் எண்ணினார். **ஒருவனைத் தந்திடுதி** என்ற சொல் ஒப்பற்றவனான இராமனைக் கொடு'' எனக் கேட்டதாக அறிந்து கொண்டு, ''உன் உயிரைக் கொடு'' என யமதர்மராஜன் ஒருவனைக் கேட்டால் அவன் என்ன பாடுபடுவானோ அத்தகைய பாடுபட்டான் தசரதன் என்கிறார் கவிஞர்.

தருவனத்துள் யான் இயற்றும் தவ வேள்விக்கு
இடையூறாய்த் தவஞ்செய்வோர்கள்
வெருவரச் சென்றடை காமவெகுளியென்ன
நிருதரிடை விலக்காவண்ணம்
செருமுகத்துக்காத்தி என நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி என உயிரிரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்


''**நின் சிறுவர்**'' என்ற போது தசரதனது நெஞ்சிலே வேலைப் பாய்ச்சியது போலிருந்தது. **நால்வரினும்** என்ற போது நால்வரையும் கேட்கவில்லை என்ற எண்ணத்தில் மார்பிலே பாய்ச்சிய வேலைத் திரும்ப எடுத்த மாதிரி இருந்தது. ஆனாலும் புண் புண்தானே! **ஒருவனைத் தந்திடுதி** என இராம பிரானைக் கேட்டது வேல்பாய்ச்சிய புண்ணில் நெருப்பு வைத்தமாதிரி ஆகி விட்டதாம். கண்ணில்லாத ஒருவனுக்குக் கண் பார்வை கிடைத்து அதை மீண்டும் இழந்தால் என்னபாடுபடுவானோ அந்தப் பாடுபட்டான் தசரதன். மக்களேயில்லாது, பெறுதற்கரிய மக்களைப் பெற்று இவர் பின்னால் அனுப்புவதா எனத் தசரதனின் மனம் தாங்கொணா வேதனையுற்றது.

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய
சொல்மருமத்தின் எரிவேல் பாய்ந்த
புண்ணுலாம் பெரும் புழையில் கனல்
நுழைந்தாலெனச் செவியில் புகுதலோடும்
உள் நிலாவிய துன்பம் பிடித்து உந்த ஆருயிர்
நின்று ஊசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் என உழன்றான்
கடுந்துயரம் கால வேலான்.

மனத்துளே இருந்த துன்பம் உயிரை வெளியிலே தள்ள தசரதனது உயிர் இவ்வுலகமா அவ்வுலகமா என ஊஞ்சலாடிற்று என்கிறார் கவிஞர்.

ஒருவாறு தனக்குத்தானே தேறுதலடைந்த தயரதன் ''ஐயா! சரியாகச் சண்டையிட அறியாத குழந்தை ஐயா என் மகன். இக்காரியம் செய்வதற்கு, ஆற்றல் அற்றவன்.

கங்கை ஜன்னுமகரிஷியின் யாகத்தைக் கெடுத்தது. கங்கையைத் தலையில் தாங்கிய சிவ பெருமான் தட்சயாகத்தைக் கெடுத்தார். அந்த சிவபெருமானே உமது யாகத்தைக் கெடுக்க வந்தாலும் சரி. நாமிருக்கும்போது, படைப்புத் தொழில் நம்முடையதாக இருக்கும்போது திரிசங்கு உலகம் என்பதைத் தனியாக படைத்தவர் நமக்குப் போட்டி என பிரம்மன் உமது யாகத்தை அழிக்க வரலாம்! தேவேந்திரன் எவராவது யாகம் செய்தால் தன் பதவி போய் விடுமோ என எண்ணி யார் யாகம் செய்தாலும் கெடுக்கும் வழக்கம். அப்படிப்பட்ட தேவேந்திரனே உமது யாகத்தைக் கெடுக்க வந்தாலும் சரி சிவ பெருமானோ, பிரமனோ, தேவேந்திரனோ தனித் தனியாகவோ அல்லது மூவரும் சேர்ந்து உமது யாகத்தைக் கெடுக்க வந்தாலும் சரி, நான் உமது வேள்வியைக் காப்பேன், எழுக'' என்றான்.



தொடையூற்றும் தேன்துளிக்கும் நறுந்தாரன்
ஒருவண்ணம் துயரம் நீங்கி
படையூற்றமிலன், சிறியன் இவன், பெரியோய்!
பணியிதுவேல், பனி நீர்க்கங்கை
புடையூற்றும் சடையானும்: நான்முகனும்:
புரந்தரனும் சேர்ந்து செய்யும்
இடையூற்றுக்கு இடையூறாய் யான் காப்பேன்;
பெரு வேள்விக் கெழுக என்றான்

இது கேட்டு விசுவாமித்திரர் சீற்றங்கொண்டு எழ, அந்த முனிவனது சீற்றம் உலகத்தை அழித்து விடுமோ என அனைவரும் அஞ்சிய நிலையில், வசிட்டர், விசுவாமித்திரர் தன்மீது பகையுள்ளவர் என்பதைக் கூட மறந்து ''பெரியவர்கள் பொறுத்துக் கொள்ள வேணும்'' எனத் தன் சீடனான தசரதனுக்காகப் பரிந்து பேசி'' விசுவாமித்திரரின் உருவத்தில் காலன் வரவில்லை. யோக காலம் வந்துள்ளது. உலகத்தில் பெய்யும் மழை நீரெல்லாம் கடலிலே கலப்பது போல, கல்விக் கடலான இராம பிரானிடம் விசுவாமித்திரன் மூலம் பலகலைகளானவை வந்தடையப் போகின்றன. எனவே இராமபிரானை இவனுடன் அனுப்புக'' என்றார். குருவின் கட்டளையை ஏற்று இராமபிரானை விசுவாமித்திரருடன் அனுப்ப இணங்கிய தசரதனை **குருவின் வாசகம் கொண்ட கொற்றவன்** - வெற்றியுள்ளவன் எனக் குறிக்கிறார் கம்பர். ஆசிரியர் சொற்படி நடப்பவர் வெற்றியடைவர் என்பது குறிப்பு. **திருவின் கேள்வனை** எனத்தசரதர் இராமபிரானைக் குறிக்கிறார். வெற்றியான திரு (ஜயலட்சுமி) - லட்சுமி நாயகன் (திருமணம் செய்து கொள்ளப் போகிறவன்) என்ற நல்வார்த்தைகள் தசரதன் வாக்கில் வருகின்றன. இராமபிரான் தம்பியுடன் வருகிறார். **ஒருவனை தந்திடுதி** என்ற விசுவாமித்திரர் எதிரில் இலக்குவனும் வருகிறார். இராம பிரானுக்கு உடம்புக்குள் ஒரு உயிர் - உடம்பிற்கு வெளியில் இலக்குவன் என்ற உயிர் **தனியாருயிராய் உள்ளாய்!** என இராமபிரானே அழைப்பார். உடலான இராமனுடன் மற்றொரு உயிரான இலக்குவனும் வந்தார். இராமபிரான் உலகத்தையே காக்க வில்லுடன் புறப்பட்டுவிட்டான் என்பதை **வில் ஒன்று தாங்கினான். உலகம் தாங்கினான்** எனக் குறிப்பிடுகிறார். தயரதனின் உயிரான இராமபிரான் விசுவாமித்திரரின் பின்னாலேயே புறப்பட்டுவிட்டது என்கிறார் கம்பர்.

★★★

''கம்பநாடன் கழல் தலை கொள்ளுவாம்''

(தொடரும்)

# சிவராத்திரிப் புராணக் கதைகள்

- நடராசன் அடிமை

(முன் தொடர்ச்சி)

## குபேர பதவி அளிக்கும் சிவராத்திரி விரதம்

புராதலமெனும் நகரை விபரிசன் என்ற வீரமன்னன் ஆண்டுவந்தான். வேட்டையாடித் திரிந்த போதிலும் ஒவ்வொரு சதுர்த்தசியன்றும் சிவபூஜை செய்து உணவில்லாமலும் இரவு உறங்காமலும் இருந்தான். அவனை அவனது மனைவியான குமுதவதி என்பாள் ''இவ்வளவு சிவபூசை செய்யும் நீங்கள் வேட்டையாடுகிறீர்கள். பல பெண்களை மனைவியாகக் கொண்டிருக்கின்றீர்களே!'' எனக் கேட்க விபரிசன் சிரித்து'' முன் வினைப்பயனால் யாவும் கிடைத்துள்ளன. முக்காலங்களையும் நான் அறிவேன். முன்பிறவியில் பம்பை என்ற ஊரில் நாயாகப் பிறந்தேன். அங்கிருந்த சிவாலயத்தில் சிவ பெருமானுக்குப் படைப்பதற்தகாக வைத்திருந்த சோற்றைத் திருடி உண்ண எண்ணினேன். அங்கிருந்தவர்கள் என்னை அடிக்க வந்தனர். நான் உயிருக்கஞ்சி கோயிலை வலம் வந்து ஓடினேன். அது போது அந்தணர்கள் சிவபெருமானுக்கு தீபாராதனை செய்யும் போது சிவதரிசனம் செய்தேன். அன்று சிவராத்திரி. திடீரென ஒருவர் அடித்ததால் உயிர் நீங்கி, முக்காலும் உணர்ந்த அரசனாகப் பிறந்தேன். சிவராத்திரியின் பெருமையை அறிந்ததால் ஒவ்வொரு சதுர்த்தசியும் பூசை செய்து ஆகார நித்திரையின்றியுள்ளேன்.'' என்று கூறினான். குமுதவதி ''அப்படியானால் நான் முன் பிறவியில் என்னவாயிருந்தேன் கூறும்'' என்ன, விபரிசன் ''நீமுன் பிறவியில் மல்லிகார்ச்சுனம் திருக்கோயிலில் ஒரு புறாவாக இருந்தாய். ஒரு மாமிசதுண்டத்தை நீ கவ்விக் கொண்டு பறந்தபோது உன்னிடமிருந்து அதைப் பறித்துக் கொள்ள ஒரு கழுகு உன்னை விரட்டியது. நீ அச்சிவாலயத்தைச் சுற்றிப் பறந்தாய். உன்னைக் கொன்று அக்கழுகு மாமிசத்தைப் பிடுங்கிச் சென்றது. உயிர் நீங்குமுன் சிவாலயப் பிரதட்சிணம் செய்ததால் அரசன் மகளாகப் பிறந்து என் மனைவியானாய்.'' என்றான்.

குமுதவதி ''அப்படியாயின் நமது அடுத்த பிறப்பு என்ன?'' எனவிபரிசன், ''தேவி! சிந்துநாட்டின் மன்னவனாக நான் பிறப்பேன். நீ சஞ்சயன் என்னும் அரசன் மகளாகத் தோன்றி என் மனைவியாவாய். அடுத்து நான் சௌராஷ்டிர தேசமன்னவனாக, நீ கலிங்கன் மகளாகப் பிறந்து என்னை மணப்பாய். நான்காவது பிறவி காந்தார நாட்டினரசனாக வருவேன். நீ மகத தேச ராச குமாரியாகி என்னை அடைவாய். பின்னர் அவந்தி தேசத்தில் அரசனாக வருவேன். நீ தாருணன் என்ற அரசன் மகனாக வந்து என்னையடைவாய். ஆறாம் பிறப்பில் நான் தமிழ்நாட்டில் பிறப்பேன். நீ யயாதி என்ற அரசன் மகளாக வந்து என்னையடைவாய். பின்னர் நான் பதுமவர்மன் என்ற பாண்டியனாக வருவேன். நீ விந்திய தேசத்தில் வசுமதி என்ற பெயருடன் பிறப்பாய். அங்கு உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிப்பலர் வருவர். நீ எனக்கு மாலையிடுவாய். வெகுகாலம் வாழ்ந்து பின்னர் அகத்தியரின் உபதேசம் பெற்று நற்கதியடைவோம். சிவராத்திரி விரதம் அரச போகத்தை அடுத்தடுத்து அளிக்கும்'' என்றான்.

★★★

காம்பிலி தேசத்தில் வேள்விதத்தன் என ஒரு நல்ல பிராமணன் குணநிதி என்ற ஒரு மகனைப் பெற்று வளர்த்து மணமுடித்து வைத்தான். விதியின் கொடுமையால் குணநிதி சூதாட்டத்தில் ஈடுபட்டபின் தினமும் தன்னிடமுள்ள பொருள்களை சூதில் தோற்றான். ''மகன் எங்கே?'' என்று வேள்விதத்தன் கேட்டால், அவன் மனைவி மகன் சூதாடுகிறான் என்ற உண்மை நிலையை மறைத்து ''கல்வி கற்கச் சென்றுள்ளான்'' என்பாள். ''உன் தந்தை நீ சூதாடுவது அறிந்தால் மிகவும் வேதனையடைவார்'' என்று தாய் எவ்வளவோ புத்தி கூறியும் மகன் பெண்ணாசையும் மேலிட்டு ஒழுக்கம் நீங்கினான்.

ஒரு நாள் வேள்விதத்தன் தன் மனைவியிடம் ஒரு மோதிரத்தையளித்தான். மகனான குணநிதி அதைத் திருடி ஒருவனிடம் சூதாட்டத்தில் தோற்றுவிட்டதை பிரமதத்தன் அறிந்தான். மகன் சூதாடுகிறான், மனைவி பொய் கூறுகிறாள். எனவே அக்குடும்பத்தை விட்டுச் செல்வத்தின் தேவதையான திருமகள் மறைந்தாள்.

வேள்விதத்தன் வேறு திருமணஞ் செய்து கொண்டு முன் குடும்பத்திலிருந்து விலகி வாழ குணநிதி வேதனையடைந்தான், ''கல்வி கற்கவில்லை. ஒழுக்கம் தெரியவில்லை. யார் எம்மைக் காப்பார்?'' என வெறுத்து வாழ்ந்த குணநிதி, ஒரு சிவராத்திரி நாளில் கோயிலுக்குச் செல்லும் அந்தணர் ஒருவர் பின்னே சென்று அவர் வைத்துள்ள சோற்றுப் பிரசாதத்தைத் திருடச் சென்றான். நான்கு சாமமும் பூசை நடக்க, பசி ஒருபுறம் வாட்ட தூங்காமல்

பூசையை தரிசித்தான். பூசை செய்த அன்பர் தூங்குவது கண்டு அவர் கொண்டுவந்த சோற்றைத் திருட எண்ணி, வெளிச்சம் போதாமல் அங்கிருந்த விளக்கைத் தூண்டி ஒளி கிடைக்க, சோற்றைத் திருடிக் கொண்டு செல்லும் போது வழியில் தூங்கும் ஒரு பிராமணனை மிதித்துவிட்டான். ''திருடர்!'' என அவர் அலற, கூட்டத்தினர் யாரென அறியாமல் அவனது தலையை வெட்டிக் கொன்றனர். அவனை அழைக்க வந்தயமதூதர் ''சிவராத்திரி இரவு பட்டினிகிடந்து கண் விழித்து சிவபெருமானது எதிரிலிருந்த தீபத்தையும் தூண்டி ஒளியுண்டாக்கினான். இவன் கலிங்க தேசத்து அரசனாவான்'' என சிவ கணங்கள் பேச அவனை விட்டுச் சென்றனர்.

கலிங்க தேசத்தின் அரச வம்சத்தில் பிறந்த குணநிதி முன் பிறப்பின் நினைவுத் தொடர்பால் ஆலயங்களெங்கும் தீபங்கள் ஏற்றி ஒளியுண்டாக்கி நீதி தவறாது வாழ்ந்தான். அதனால் அவன் குபேரனாகப் பிறந்து சிவபெருமானுக்கு நண்பனானான். இறைவன் காட்சி கொடுக்க ''உன் ஒளி மிக்கத் தோற்றத்தைக் காண அடியேனுக்கு கூசாத கண்வேண்டும்'' என வரம் பெற்றான். அம்மை அவனைக் கண்டு அவனுக்கு இடது கண்பார்வை இழக்க வேண்டும் என்று சீற, ''அவன் உன்னை பக்தியுடன் தான் நோக்கினான். அதனால் அவனுக்குக் கண் கொடு'' என அவன் கண் பொற் கண்ணாக விளங்கியது. இறைவன் குணநிதியை ''குபேர! நீ இன்று தொட்டு என் தோழன்'' என்றார்.

துறை மங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் தனது நால்வர் நான்மணி மாலையில் ''பணக்கார நண்பன் வேண்டுமெனக் குபேரனைக் கொண்டார். படித்த நண்பன் வேண்டுமென சுந்தரரே உம்மை சிவ பெருமான் நண்பராகக் கொண்டாரோ?'' எனக் கேட்கின்றார்.

அறிந்து செல்வம் உடையானாம் அளகைப்பதியான்
தோழமை கொண்டு
உறழ்ந்த கல்வியுடையானும் ஒருவன்
வேண்டுமென இருந்து
துறந்த முனிவர் தொழும் பரவை துணைவர்
நினைத்தோழமை கொணடான
சிறந்து அறிவு வடிவமாய்த் திகழும்
நுதற் கட்பெருமானே!

குபேரன் பதவி சிவராத்திரி விரதத்தால் தான் உண்டானது.

★★★

அங்கிரா, பிருகு, ரிஷபன், ததீசி, அத்திரி, காசிபன், சுபேதன், வான்மீகி, சரபன், சாபாலி, பரத்துவாசர், புலத்தியர், சுசீலன், நாரதன், மரீசி, சுகன், மார்க்கண்டர், ஜனகர் ஆகிய பெரியோர்கள் ''உயிர் நீங்கிய பின் மோட்சமலிக்கும் சிவராத்திரி நோன்பு உயிருள்ளபோது சுகமளிக்குமா?'' எனக் கேட்க சூத முனிவர் கூறினார்.

''சிவராத்திரி விரதம் வறுமையை நீக்கும். செல்வமளிக்கும். பஞ்சமா பாதகவினைகளை நீக்கும்.'' என்றார்.

அரவுமதிமுடித்த சடை அரன்இரவில் கண்படை
நீத்து அருச்சித்தால் நல்
குரவுதுகள் படுத்தி: நெடுநிலத்தில் மிகுசெல்வ
மெல்லாம் கொடுக்கும்: ஐந்தாய்
விரவுகொலை முதல் பாவவல்வினையின்
வேர் பிடுங்கி வீடு நல்கும்
பரவும் இதின் நிகழ்கதை யொன்றுளது உளது
என்று உயர்சூதன் சொல்வானானார்.

சாலிகோத்திரன் எனும் பெயருடைய ஒருவன் நல்லொழுக்கம் பக்தி முதலானவை நிறைந்தவனாயிருந்தான்.

வேதியர் குலத்துதித்த விண்மணி கண் மணி
எனவே விளங்கும்: வேதம்
ஓதி உணர்ந்து: அறிவரிய கலைக் கடலின்
கரைகடந்திட்டு: உயர் நூல் வல்ல

## சினம் வேண்டாம்

உங்கள் வீட்டில் ஆடைகளைத் தொங்க விட பலவித சாதனங்களை வைத்திருக்கிறீர்கள்.

உங்களுடைய சினத்தையும் எங்கேனும் ஒரு அலமாரியினுள் தொங்க விட்டு விடுங்கள்.

சினத்திற்கு ஆளாகாமல் தலை கொதிப்படையாமல் இருந்தீர்கள் ஆனால் உங்களால் இவ்வுலகை வெல்ல முடியும்.

- சுவாமி தேஜோமயானந்தா

வாதியரை வென்று: சந்தி வந்தனைகள்
முப்பொழுது வழுவாதாற்றிச்
சாதிமுறை தவறாமல் நீதியுடன் நெடிது
சஞ்சரிக்கும் நாளில்.

மனைவிமக்கள் உள்ள பெரிய குடும்பத்தை யுடையவன் வறுமையினால் பீடிக்கப்பட்டு ''இது இறைவன் சோதனையோ'' என வேதனை கொண்டு அகஸ்தியர் இருக்கும் இடம் தேடி பொதியமலையை யடைந்து'' பாம்பின் வாய்த்தேரை போல் வறுமை யால் வாடுகிறேன். எனக்கு ஒரு நல்ல வழிகாட்டி அருள வேண்டும்'' என வேண்டினான்.

''சிவராத்திரி விரதமிருந்தால் வறுமை நீங்கி வாழ்வதுடன் நற்கதி பெறலாம். நல்ல நிலத்தில் விதையிட்டால் செழுமையாக விளைவது போல் நல்ல தலத்தில் சிவராத்திரி விரதம் செய்வாய். வேதவனம் என்ற திருமறைக்காடு அழகிய இடம். திருக்கோயிலின் முன்னே வன்னிமரம் ஒன்றுளது. அது அடியார்களின் பாவத்தை நீக்கும்.

வேதநதியில் நீராடி, சோமதீர்த்தத்திலும் குளித்து, வேதாமிர்தத் தீர்த்தம், மணி கர்ணிகை முதலானவற்றில் நீராடி சிவபெருமானை வணங்க வேண்டும். வேதாரண்யம் திருவாரூர், சிதம்பரம், காசி முதலானவை போல் சிறந்தது.'' என அகத்தி யர் கூற சாலிகோத்திரன் வேதாரண்யம் அடைந்தான்.

வேதாரண்யத்தில் அம்மையின் பெயர் யாழைப் பழித்த மொழியம்மை. (வீணா வாத விதூஷணி)

சிவபெருமானின் பெருமையை கலைமகள் வீணையில் இசைத்துப்பாடினாள். சிவபெருமான் அசைவற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார். அம்மை திடீரென்று பேச இறைவன் தலையை ஆட்டிக் கேட்டருளினார். கலைமகளின் வீணை நாதத்தையும் வென்றது அம்மையின் குரல். எனவே கலைமகள் தனது வீணையை உறையில் இட்டுவிட்டாள். என்பது சௌந்தர்யலகரி 66வது பாடலின் கருத்து.

பசுத்த மலர்க் கொடி கருணை பழுத்தனைய
கொம்பே! நின் பிரமர் பொன்தோள்
விசைத் தொழிலைக் கலைவாணி தனிற்பாடிப்
பாடி அவண் மெலிவதல்லால்
அசைத்திலர் பொன்முடி: உனது மதுரமொழிக்கு
அசைத்தனர் என்று அதற்கு நாணி
இசைத் தொழிலைக் கைவிட்டாள்! எழில் வீணை
உறையில் இட்டாள் ஏது செய்வாள்?

சௌந்தரிய லகரி - வீரை கவிராஜபண்டிதர் தமிழாக்கம்.

இன்றும் வேதாரண்யம் திருக்கோயிலில் உள்ள கலைமகள் திருக்கரத்தில் வீணை இல்லை.

இத்தகைய திருத்தலத்தில் சாலிகோத்திரன் முறைப்படி பூஜை செய்தான். எல்லாச் சதுர்த்தசி களிலும் பூஜை நான்கு யாமங்கள் உணவின்றி உறங்காது பூசை செய்தான்.

சிவநிசியாம் சதுர்த்தசியில் திங்கள் தொறும்
துயில் உணவு சிறிதுமின்றி
தவமுயல்வான் நீராடி வில்வமுடன் கந்த
மலர் சந்தம் சாத்தி
பவமறமந்திரம் நவின்று பரிந்து நிவேதனம்
புரிந்து பாடி ஆடி
நவநவமாச்சிவபூசை நாலுயாமமும் முடித்து
நடத்தும் நாளில்

என அவன் செய்த பூசையைக் கூறுகிறது சிவராத் திரி புராண மந்திரக்கவிதை.

பூசை ஏற்று மகிழ்ந்த இறைவன் அம்மை யுடன் காட்சி தந்தார் ''கண்ணப்பனின் பூசையை ஏற்ற பெருமானே! திரிபுராந்தக! நரிக்குதிரை கூட்டத்துடன் பாண்டியன் எதிரிலே குதிரைச் சேவகனாக வந்த பெருமானே! கங்காதரப் பெருமானே! பிட்டுக்கு மண்சுமக்க வந்து அடிபட்ட பெருமானே! தலைமாலையணிந்தவரே! தட்சிணா மூர்த்தியே! அம்மையப்பனே! சுந்தரற்காக தூது நடந்த கருணையாளனே! தீமைகளை அழிக்கும் மணிகர்ணிகைக் கட்டத்திலுள்ள தெய்வ நாயக! கால காலனே! இராவணனைத் திருவடியால் அமுக்கி அடக்கிய பெருமானே! பிறவி தீரும்படி அருளி, அன்பினால் உருகி உன் திருவடியை வணங்குபவருக்கு இன்பந்தரும் பித்தா! நீ எனை ஆட் கொண்டு அடியேனுக்கான வரம் விரும்பித்தா'' என் றெல்லாம் வேண்டினான்.

துன்பம் தரும் பிறவிப்பிணி தொலையும்படி:
நிலையாம்
அன்பு அங்கியின் இழுதிட்டென அக
நெக்குருகிப் பூ
நன்பங்கய நிகர் நின்பதம் நாளும்
தொழும் அடியார்க்கு
இன்பந்தரும் பித்தா! வரம் எனை நீ விரும்பித்தா!

''சாலிகோத்திர! இந்திரன் மாதிரி எல்லா விதமான இன்பங்களையும் மனைவிமக்களோடு நன்கு அனுபவித்துப் பின்னர் நம்கயிலைக்கு வந்து சேர்வாயாக!'' என்று அருள சாலிகோத்திரன் குபேரன் மாதிரி செல்வங்களையடைந்து நன்கு அனுபவித்துப் பின்னர் சிவபெருமானையடைந்தான். மங்களம்.

வாழி மாதவர்! வாழி மனு நெறி
வாழி மாநிலம்! வாழி நல் ஆனினம்
வாழி நான் மறை! வாழி மழை முகில்!
வாழி வைதிக சைவ வழக்கமே.

திருச்சிற்றம்பலம்.

*(சிவராத்திரிப் புராணக் கதைகள் நிறைவுபெற்றன)*

# குருவருள் நல்கும் திருஇரும்பூளை திருத்தலம்

- கோ. சிவஞானம்

## தலமும் இருப்பிடமும்

வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டிலே தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு வடக்கே 7 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து தெற்கே 17 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து மன்னார்குடி (நீடாமங்கலம் வழி) பஸ் மார்க்கத்தில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. சோழ நாட்டில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற 274 தலங்களில், காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில் 98-ஆவது தலமாக விளங்கிவரும் தலமாகும்.

## தலப் பெயர்கள்

காசி ஆரண்யம் - திருஇரும்பூளை - ஆலங்குடி என்ற பெயர்களால் வழங்கப்பெறுவது; திருஞான சம்பந்தப் பெருந்தகையால் "எழிலார் இரும்பூளை" என அருளப்பெற்றது. பாற்கடல் கடைந்தபோது உண்டான ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி அபயம் புகுந்த தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் தோழனாகிய சுந்தரமூர்த்தியைக் கொண்டு விஷத்தைக் கொண்டுவரச் செய்து குடித்துக் கண்டத்து அடக்கியமையினால் அப்பெயர் பெற்றது. இதை விளக்கும் காளமேகப் புலவர் பாடலும் இருக்கிறது. அது

"ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான் என்று ஆர்சொன்னார் - ஆலம்
குடியானே யாகில் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதினில்"

இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை.

## கோயிலமைப்பு

கோயில், ஊரின் மத்தியிலே நான்கு புறமும் தாமரை பூத்த அகழியாலும் உயரமான மதில்களாலும் சூழப்பெற்று மிகவும் அழகான தோற்றத்துடன் கூடிய ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் காட்சியளிக்கிறது. தென்புறம் அமைந்த இந்தக் கோபுரத்தில் பழைமையான சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன. கோபுர வாயிலுள்ளே பிரவேசித்ததும் மேலக் குடவறையில் கலங்காமல் காத்த விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. அவரை வணங்கி உள்ளே நுழைந்தால் முதல் பிராகாரம் காணப்படுகின்றது. எதிரே அம்மையாரின் தெற்கு நோக்கிய சந்நிதி காணப்படுகின்றது. கொஞ்சம் உள்போய் மேற்கு நோக்கித் திரும்பி இரண்டாவது வாயிலைக் கடந்ததும் உள்ளே தென்புறம் உள்ள கீழ்த் திருமாளப் பத்தியில் சூரியர் சந்நிதி இருக்கிறது. தென்புறம் உற்சவ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய திருக்கோலத்துடன் அருள்பாலிக்கிறார். அடுத்தாற்போல் தெற்குத் திருமாளப்பத்தியில் (உள் பிராகாரத்தில்) நால்வர் திருவுருவமும், சூரியேசர் சோமேசர், குருமோக்ஷேசுரர், சோமநாதர், சப்தரிஷி நாதர், விஷ்ணு நாதர், பிரம்மேசர் ஆகிய சப்த லிங்கங்களோடு காசி விசுவநாதர், விசாலாக்ஷி, அகத்தியரும் உள்ளனர். மேலத் திருமாளப்பத்தியில், ஆக்ஞா கணபதி, சோமாஸ்கந்தர், பெரும் திருவுருவத்துடன் கூடிய கலங்காமல் காத்த விநாயகர், நின்ற கணபதி, சந்திரசேகரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, பக்தர், சண்டேசுரர், கல்யாண சாஸ்தா, ஸப்தமாதா முதலிய உற்சவர்களும், அடுத்து முருகன், இலக்குமி இருப்பிடமும், வடக்குத் திருமாளப் பத்தியில் நவக்கிரஹம், சபாபதி, சிவகாமி அம்மை, சம்பந்தர், அப்பர், மணிவாசகர் முதலியோரும் காட்சி தருகிறார்கள். சபாநாதர் சந்நிதியில் திருமுறைக்கோயிலும் அமைந்துள்ளது. அடுத்து உத்ஸவ தட்சிணாமூர்த்தி, சனகாதி நால்வருடன் காட்சி தருகிறார். கீழ் திருமாளப்பத்தி வடபுறம் பைரவர், சந்திரன் சந்நிதியும் உள்ளது. சுவாமி மகா மண்டபத்தில் நந்தி, பலிபீடம் (செப்புத் திருமேனியுடன்) உள்ளது. மகா மண்டப வாயிலில் துவார பாலகரும் கருவறையில் கிழக்கு நோக்கி ஆபத்சகாயரும், அர்த்த மண்டபத்தில் பள்ளியறை சொக்கரும், போகசத்தி அம்மையும் உள்ளனர். தெற்கு கோஷ்டத்தில் கணபதியும், அடுத்து இத்தலத்து சிறப்பு மூர்த்தியாகிய குரு தட்சிணாமூர்த்தி இருப்பிடமும், மேலக் கோஷ்டத்தில் லிங்கேசுரரும் அடுத்து 'ஞானகூபம்' என்னும் தீர்த்தக் கிணறும் உள்ளன. வெளியே சுக்கிரவார அம்மன் சந்நிதியும் பள்ளியறையும் உள்ளன. தெற்கு நோக்கிய அம்மன் சந்நிதி தனியான

பிராகாரத்துடன் உள்ளது. துவார சக்தி, செப்பு நந்தி பலி பீடமும், கீழ்ப்புறம் திருமாலைக் கட்டி மண்டபமும், மேற்கு நோக்கி சனீச்சுரர் சந்நிதியும், த்வஜ கணபதி கொடி மரம், நந்தி பலிபீடமும், வடபுறம் வசந்த மண்டபமும், கீழ்ப்புறம் யாக சாலையும், பாகசாலையும், கீழ்த்திருவாயிலும் அடுத்து தென்புறம் வடக்கு பார்த்து சப்தமாதா ஆலயமும், வடபுறம் திரு நந்தவனமும் உள்ளது.

### மூர்த்திகள்

இறைவன் பெயர்கள் - காசி ஆரண்யேசுரர், ஆபத் சகாயர்

இறைவி பெயர்கள் - ஸ்ரீ உமையம்மை, ஏலவார் குழலியம்மை

விசேட மூர்த்தி - ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி

விசேட தலம் - ஸ்ரீகுருமூர்த்தி பரிகார ஸ்தலம்.

### தீர்த்தங்கள்

1. பிரம்ம தீர்த்தம் - தெற்கு சந்நிதியில் உள்ளது. அதில் தீர்த்த உத்ஸவ மண்டப அடித்தளம் மட்டும் காணப்படுகிறது.
2. இலக்குமி தீர்த்தம் - மேல வீதிக்கு மேல்புறம் உள்ளது. அது ஆயக்குளம் என வழங்குகிறது.
3. இந்திர தீர்த்தம் - கீழ வீதிக்கு கீழ்ப்புறம் உள்ளது. செட்டித்தோப்பு குளம் என வழங்குகிறது.
4. அக்னி தீர்த்தம் - அருகில் உள்ள கிராமமாகிய பூனாயிருப்பில் உள்ளது.
5. யம தீர்த்தம் - அருகில் உள்ள நரிக்குடி என்ற கிராமத்தில் உள்ளது.
6. நிருதி தீர்த்தம் - அருகில் உள்ள புலவநத்தம் கிராமத்தில் உள்ளது.
7. வருண தீர்த்தம் - அருகில் உள்ள பூந்தோட்டம் கிராமத்தில் உள்ளது.
8. வாயு தீர்த்தம் - அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் உள்ளது.
9. குபேர தீர்த்தம் - அருகில் உள்ள கீழ அமராவதி கிராமத்தில் உள்ளது.
10. ஈசான தீர்த்தம் - அருகில் உள்ள சித்தன்வாழூர் கிராமத்தில் உள்ளது.
11. சூரிய தீர்த்தமும், 12. சந்திர தீர்த்தமும் - கீழ்த் திசையில் உள்ளன. இரண்டு தீர்த்தங்களும் இருக்கும் இடங்கள் என்றும் சூரியேசுரம் என்றும் சோமேசுரம்என்றும் வழங்கப்படுகின்றன.
13. அமுதபுட்கரணி - ஆலயத்தைச்சுற்றி அகழியாக உள்ளது.
14. ஞானகூபம் கிணறு - சுவாமி மகா மண்டபத்தில் திருமஞ்சனக் கேணியாக உள்ளது.
15. பூளை வள ஆறு - கிழக்கில் உள்ளது, துலா மாதத்தில் இதன் தீர்த்தத்தைக் கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்து வருகிறார்கள்.

### தலப்பெருமை

இந்தத் தலம் காவிரி நதியின் தென் கரையில் ஒரு காத தொலைவில் உள்ளது. சீரும் சிறப்பும் பெற்றது. தேவர்கள் அமுதம் கடைந்தபோது ஏற்பட்ட விஷத்தினால் அவதியுற்று ஆண்டவனை வழிபட, ஆலமாகிய விஷத்தைக் குடித்துக் காத்தமையால், இவ்வூருக்கு ஆலங்குடி எனவும், இறைவனுக்கு 'ஆபத்சகாயர்' எனவும் பெயர் வழங்கப்படுகின்றது. இந்த ஊரில் அரவு தீண்டி மரித்தவர் இல்லை. கஜமுகாசுரனால் தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்குக் 'கலங்காமல் காத்த விநாயகர்' எனப் பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனைத் திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமண மங்கலம் எனப் பெயர் வழங்கப் பெறுகிறது. மத்தியார்ச்சுன மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரத் தலமாக உள்ளது. திருஇடை



மருதூருக்குப் பரிவாரத் தலங்களாவன: 1. திருவலஞ் சுழி (விநாயகர்) 2. திருவேரகம் (முருகன்) 3. திருவாவடுதுறை (நந்தி) 4. சூரியனார் கோயில் (நவக்கிரகம்) 5. திருவாப்பாடி (சண்டேசுரர்) 6. சிதம்பரம் (நடராஜர்) 7. சீர்காழி (பைரவர்) 8. திருவாரூர் (சோமாஸ்கந்தர் - தியாகேசன்) 9. ஆலங்குடி (தட்சிணாமூர்த்தி). பஞ்சவாரண்ய தலங்களாகிய 1. திருக்கருகாவூர் 2. திரு அவளிவ நல்லூர் 3. திரு அரந்தைப்பெரும்பாழி 4. திரு இரும்பூளை என்கிற ஆலங்குடி 5. திருக்கொள்ளம்புதூர் - இவைகளில் நான்காவது தலமாக உள்ளது விசுவாமித்திரர் பூஜித்த தலம். அம்மையின் திருமணத்திற்கு வந்த திருமால், பிரம்மா, இலக்குமி, கருடன், அஷ்டதிக்கு பாலகர், ஐயனார், வீரபத்திரர் முதலானோர் தம் தம் பெயரால் லிங்கங்கள் நிறுவி பூஜித்து வழிபட்ட தலம். முசுகுந்த சக்ரவர்த்தி, சுவாசனன், சுந்தரர் முதலியோர் வழி பட்ட தலம், திருஞானசம்பந்தரால் பதிகம் பெற்றது. அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத் திருத்தாண் டகத்தில் சேர்த்துப் பாடப்பெற்ற சிறப்புடையது. திருஞான சம்பந்தர் தமது பாடல்களால் இத்தல அம்மனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## புராண வரலாறும், வழிபட்டோரும்


***சுந்தரர் :*** பல தலங்களையும் தரிசித்து, இந்தத் தலத்துக்கு வந்துகொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமி கள் அகத்திய காவிரி என்னும் வெட்டாறு, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த காரணத்தால், கரையில் அடியார்களுடன் மனம் கலங்கி நிற்க, காசியாரண்யேஸ்வரராகிய ஆபத்சகாயர் ஓடக்கார னாக வந்து இக்கரைக்குக் கொண்டு விடுவதாகச் சொல்லி பவுன்கள் பெற்று, முதலில் அடியார்களில் சிலரை இக்கரை கொண்டுவந்து சேர்த்து மீண்டும் சுந்தரரிடம் போய் அடையாளச் சன்மானம் கேட்டுப் பெற்று அவரை ஏற்றி வருகையில் நடு ஆற்றில் திருவிளையாடலாக சுழல் ஏற்படும்படி செய்து, பற்றுக்கோலை நழுவவிட்டு எடுப்பதைப்போல் பாசாங்கு செய்து தானும் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன் போல் நிற்க, படகில் உள்ள நாய னார் இறைவனை வேண்ட ஓடம் சிறிது தூரம் சென்று பாறையில் மோதி நொறுங்கியது. சிவபெருமான் ரிஷபாருடராகத் தோன்றி யாவரையும் தூக்கிக் காப்பாற்றியதாக வரலாறு வழங்குகிறது. பின்பு சுந்தரர் தலத்துக்கு வந்து முறைப்படி வணங்கி வழிபட்டு தட்சிணாமூர்த்தியைத் தரிசித்து ஞானோப தேசம் பெற்றார். இந்தத் தலத்தில் உள்ள குருமூர்த்தி யைக் குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு சிவஞானம் எளிதில் கைகூடும். மீண்டும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார்கள் கூட்டத்துடன் அரவூர் கார் கோடகேஸ்வரரை வழிபட்டு நீடாமங்கலத்திலுள்ள சக்ரவாகப் பட்சியால் பூசிக்கப்பெற்ற கோமுகேஸ் வரரை வழிபட்டார்.

திருவாரூரில் நடைபெறும் விழாவில் அப் பொழுது அரசாண்ட ஈச சோழராஜா எல்லாத் தலங் களிலும் உள்ள சுந்தரமூர்த்தி திருவுருவங்களைக் கொண்டுவந்து விழா நடத்தினான். எல்லா சுந்தர மூர்த்திகளையும்விட ஆலங்குடியில் உள்ள சுந்தரர் திருஉரு அவன் மனதைக் கவர்ந்து விட்டது. அதைத் திருவாரூரிலேயே வைக்கவேண்டுமென்று விரும்பி னான். அதை அறிந்த ஆலங்குடி ஆதி சைவசிவாச் சாரியார்கள் குழந்தைக்கு அம்மை போட்டிருப்பது போல் தொட்டில்கட்டி ஆலங்குடி கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்த அம்மைத் தழும்புகளை இன்றும் பெருமாள் மீது காணலாம்.

***வழிபட்டோர்கள் :*** ஆதிசங்கரர் குருமூர்த்தி யைத் தரிசித்து சிவஞானம் பெற்றார். இந்திரன் முதலிய அஷ்டதிக்கு பாலர்கள் இறைவனை வழிபட்டுத் தம் பெயரால் தீர்த்தமும் சிவலிங்கமும் நிறுவி பூஜித்து, தங்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் நீங்கிப் பேறுபெற்றார்கள். சுவாசனன் என்ற அரசன் பஞ்சமாபாதகங்களை அஞ்சாமல் செய்து அழிந்து நரகம் அடைந்து துன்புற்றுப் பின், பூலோகத்தில் பைசாசமாக அலையும்போது, முன் நல்வினையால் அகத்தியரைச் சந்தித்து அவரையும் துன்புறுத்த முயலும்போது, அவர் உபதேசித்த படி இத்தலத்தை அடைந்து தீர்த்தமாடி வழிபட்டு, இழந்த செல்வத் தையும் பேரரசையும் திரும்பப்பெற்றான்.

***பார்வதியார் :*** கைலாசத்தில் பார்வதி அம்மை யார் தோழியர்களோடு பந்தாடியபோது உயரப் போன பந்தை பிடிக்கக் கையை உயரத் தூக்கி பந்தை எதிர்பார்த்து நிற்க, வானவீதியில் சென்ற சூரியன் தன்னை நிற்கச் சொல்வதாகக் கருதித் தேரை நிறுத்த, அவன் தொழில் தடைபட்டு உலகம் அவதியுற்று சிவபெருமானிடம் முறையிட அவர் சாபத்தின் காரணமாகப் பூலோகத்தில் காசியாரண்ய தலத்தில் அவதரித்து தவம் செய்து, இறைவனைத் திருமணம் செய்து கொண்டார்.

***முசுகுந்தச் சக்ரவர்த்தி :*** முசுகுந்தச் சக்ரவர்த்தி தன் மந்திரியும் சிவபக்தருமான அமுதோகர் என்ப வருடைய சிவ புண்யத்தில் பாதியேனும் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்க, மந்திரி சம்மதியாமையால் அவர் தலையைக் கொய்யும்படி உத்தரவிட, கொலை ஞர் வாளேந்தியவுடன் சிவனாணையால் உயிர் உடனே நீங்கவும், இதன் அடையாளமாக அமுதோ



கன் என்ற சப்தம் தலம் முழுவதும் குடிகொள்ள, அரசன் வியந்து, அபசாரத்தை நினைந்து வழிபட்டு இத்தலத்து இறைவனை வணங்கிப் பாபம் நீங்கப் பெற்றான்.

## சுற்றுக் கோயில்கள்

கீழ்க் கோபுர வாயில் தென்புறம் சப்த மாதாவின் ஆலயமும், ஈசான்ய திக்கில் பாதாள பைரவி காளியம்மன் ஆலயமும், தெற்குக் கோபுர வாயில் கீழ்ப்புறம் மேற்கு நோக்கி கல்யாண சாஸ்தா ஆலயமும், தேர்முட்டிக்கருகில் கிழக்கு நோக்கியுள்ள ஆலயத்தில் கல்யாண வீரபத்ரரும் தட்சன் விநாயகர் சந்நிதியும் உள்ளன.

## திருவிழாக்கள்

பஞ்ச பருவ உற்சவம், மாதாந்திர குருவாரந் தோறும் விசேஷ தரிசனமும், குருபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு பிரவேசிக்கும் காலங்களிலும், (குரு பெயர்ச்சி) பிரதி வருஷ மாசி குருவாரத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனையும் நடைபெறுகிறது. சித்திரைப் பவுர்ணமியைக் கொண்டு பத்துநாள் விழாவும் தட்சிணா மூர்த்திக்குத் தேர்விழாவும் கொண்டாடப்படுகின்றது. தைப்பூசம், பங்குனி உத்திரத்தில் தீர்த்தவாரியும் நடைபெறுகிறது.

## நவ நாயகர்களின் பெருமை

### சூரியன்

காசிப முனிவரின் புத்திரர், ஒளிப் பிழம்பானவர், நவக்கிரகங்களில் முதன்மை பெற்றவர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | சிம்மராசிக்கதிபதி |
| திக்கு | - | நவக்கிரகங்களுக்கு நடு |
| அதிதேவதை | - | அக்னி |
| பிரத்யதிதேவதை | - | உருத்திரன் |
| தலம் | - | சூரியனார் கோயில் |
| நிறம் | - | சிவப்பு |
| வாகனம் | - | ஏழு குதிரைகள் பூட்டிய ரதம் |
| தானியம் | - | கோதுமை |
| மலர் | - | செந்தாமரை, எருக்கு |
| வஸ்திரம் | - | சிவப்புக்கரை ஆடை |
| ரத்தினம் | - | மாணிக்கம் |
| அன்னம் | - | கோதுமை, ரவா, சர்க்கரைப் பொங்கல் |

### சந்திரன்

பாற்கடலில் தோன்றியவர், தண்ணொளியுடையவர். வளர்பிறையில் சுபராகவும், தேய்பிறையில் பாபராகவும் விளங்குபவர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | கடக ராசிக்கு அதிபதி |
| திக்கு | - | தென் கிழக்கு |
| அதிதேவதை | - | நீர் |
| பிரத்யதிதேவதை | - | கௌரி |
| தலம் | - | திருப்பதி |
| நிறம் | - | வெள்ளை |
| வாகனம் | - | வெள்ளைக் குதிரை |
| தானியம் | - | நெல் (பச்சரிசி) |
| மலர் | - | வெள்ளை அரளி, வெள்ளல்லி |
| வஸ்திரம் | - | வெள்ளையாடை |
| ரத்தினம் | - | முத்து |
| அன்னம் | - | தயிர் அன்னம் |

### செவ்வாய்

அங்காரகன் : இவர் வீரபத்திரர் அம்சம். தெய்வம் சுப்ரமணியர். பாவபலனைக் கொடுக்கும் குரூரர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | மேஷம் விருச்சிக ராசிக்கதிபதி |
| திக்கு | - | தெற்கு |
| அதிதேவதை | - | நிலமகள் |

| | | |
|---|---|---|
| பிரத்யதிதேவதை | - | க்ஷேத்திர பாலகன் |
| தலம் | - | வைத்தீஸ்வரன் கோயில் |
| நிறம் | - | சிவப்பு |
| வாகனம் | - | ஆட்டுக்கிடா |
| தானியம் | - | துவரை |
| மலர் | - | சண்பகம், சிவப்பு அரளி |
| வஸ்திரம் | - | சிவப்பு ஆடை |
| ரத்தினம் | - | பவழம் |
| அன்னம் | - | துவரம் பருப்புப் பொடி சாதம் (காரம்) |

**புதன்**

இவர் சந்திரனுடைய குமாரர். தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அழிக்கும் ஆற்றல் உடையவர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | மிதுனம் கன்னி ராசிக்கு அதிபதி |
| திக்கு | - | வடகிழக்கு |
| அதிதேவதை | - | விஷ்ணு |
| பிரத்யதிதேவதை | - | நாராயணன் |
| தலம் | - | மதுரை |
| நிறம் | - | வெளிர் பச்சை |
| வாகனம் | - | குதிரை |
| தானியம் | - | பச்சைப் பயறு |
| மலர் | - | வெண்காந்தள் |
| வஸ்திரம் | - | பசுமையாடை |
| ரத்தினம் | - | மரகதம் |
| அன்னம் | - | பாசிப் பருப்புப் பொடி சாதம் (காரம்) |

**குரு**

இவர் தேவகுரு. இவருடைய பார்வையால் தோஷங்கள் அனைத்தும் நீங்கும். பூர்ணசுபர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | தனுசு மீனராசிக்கதிபதி |
| திக்கு | - | வடக்கு |
| அதிதேவதை | - | பிரம்மன் |
| பிரத்யதிதேவதை | - | இந்திரன் |
| தலம் | - | (திருச்செந்தூர்) ஆலங்குடி |
| நிறம் | - | மஞ்சள் |
| வாகனம் | - | மீனம் |
| தானியம் | - | கடலை |
| மலர் | - | முல்லை |
| வஸ்திரம் | - | மஞ்சள் ஆடை |
| ரத்தினம் | - | புஷ்பராகம் |
| அன்னம் | - | கடலைப் பொடி சாதம் (காரம்) |

**சுக்கிரன்**

இவர் அசுரகுரு. இவரை மழைக்கோள் என்று அழைப்பர். சுபர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | ரிஷபம் துலாம் ராசிக்கதிபதி |
| திக்கு | - | கிழக்கு |
| அதிதேவதை | - | இந்திராணி |
| பிரத்யதி தேவதை | - | இந்திர மருத்துவன் |
| தலம் | - | ஸ்ரீரங்கம் |
| நிறம் | - | வெள்ளை |
| வாகனம் | - | முதலை |
| தானியம் | - | மொச்சை |
| மலர் | - | வெண்தாமரை |
| வஸ்திரம் | - | வெள்ளையாடை |
| ரத்தினம் | - | வைரம் |
| அன்னம் | - | மொச்சைப்பொடி சாதம் |

**சனி**

இவர் சூரியனுடைய குமாரர், பாவபலன் களை தருபவர். ஈஸ்வர பட்டம் பெற்றவர்.

| | | |
|---|---|---|
| ராசி | - | மகர, கும்ப ராசிகளுக்கதிபதி |
| திக்கு | - | மேற்கு |
| அதிதேவதை | - | இயமன் |
| பிரத்யதிதேவதை | - | பிரஜாபதி |
| தலம் | - | திருநள்ளாறு |
| நிறம் | - | கருமை |
| வாகனம் | - | காகம் |
| தானியம் | - | எள்ளு |
| மலர் | - | கருங்குவளை, வன்னி |
| வஸ்திரம் | - | கருப்பு நிற ஆடை |
| ரத்தினம் | - | நீலம் |
| அன்னம் | - | எள்ளுப்பொடி சாதம் (காரம்) |
| தீபம் | - | எள்ளு முடிச்சு தீபம் |

**ராகு**

அசுரத் தலையும், நாகவுடலும் உடையவர். மிக்க வீரம் உடையவர். கருநாகம் என்று அழைக்கப் படுபவர்.

| | | |
|---|---|---|
| திக்கு | - | தென்மேற்கு |
| அதிதேவதை | - | பசு |
| பிரத்யதிதேவதை | - | பாம்பு |
| தலம் | - | காளத்தி |
| நிறம் | - | கருமை |
| வாகனம் | - | நீலசிம்மம் |
| தானியம் | - | உளுந்து |
| மலர் | - | மந்தாரை |

வஸ்திரம் - கருப்புநிற ஆடை
ரத்தினம் - கோமேதகம்
அன்னம் - உளுத்தம் பருப்பு பொடி சாதம் (காரம்)

**கேது**

இவர் நாகத் தலையும், அசுர உடலும் உடையவர். சிகி என்றும், செந்நாகம் என்றும் அழைக்கப்படுபவர்.

திக்கு - வடமேற்கு
அதிதேவதை - சித்திரகுப்தன்
பிரத்யதிதேவதை - பிரம்மன்
தலம் - காளத்தி
நிறம் - செம்மை
வாகனம் - கழுகு
தானியம் - கொள்ளு
மலர் - செவ்வல்லி
வஸ்திரம் - பலநிற ஆடை
ரத்தினம் - வைடூரியம்
அன்னம் - கொள்ளுப்பொடி சாதம்

**நவக்கிரகங்கள்**

சூரியன் : சூரியனார் கோயில்
கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் உள்ளது.

சந்திரன் : திங்களூர்
தஞ்சாவூர் - திருவையாறு சாலையில் உள்ளது.

செவ்வாய் : வைத்தீஸ்வரன் கோயில்
மயிலாடுதுறை - சிதம்பரம் சாலையில் உள்ளது

புதன் : திருவெண்காடு
மயிலாடுதுறை - பூம்புகார் சாலையில் உள்ளது.

குரு : ஆலங்குடி - பரிகார ஸ்தலம்
கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் 17ஆவது கி. மீட்டரில் உள்ளது.

சுக்கிரன் : கஞ்சனூர்
சூரியனார் கோயிலிலிருந்து 2ஆவது கி.மீட்டரில் உள்ளது.

சனி : திருநள்ளார்
கும்பகோணம் - காரைக்கால் சாலையில் உள்ளது.

ராகு : திருநாகேஸ்வரம்
கும்பகோணம் - காரைக்கால் சாலையில் உள்ளது.

கேது : பெரும்பள்ளம் (சாயாவனம்)
மயிலாடுதுறை - பூம்புகார் சாலையில் உள்ளது.

★★★

## குரு வணக்கப்பாடல்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

*- பரஞ்சோதி மாமுனிவர்*

TK-3

# நூல் மதிப்புரை

- அ. அருள்செல்வி

| | | |
|---|---|---|
| **நூல் பெயர்** | : | சிறுவர் இலக்கியம் |
| **நூலாசிரியர்** | : | கவிஞர் முருகுவண்ணன் |
| **பக்கங்கள்** | : | 112 (டெம்மி) |
| **விலை** | : | ரூபாய் 30/- |
| **வெளியீடு** | : | தமிழ் நெறி மன்றம்<br>7, பாரதி சாலை, 2-வது தெரு<br>பெரம்பூர், சென்னை 600 011. |

"இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்"

என்றார் பாவேந்தர் பாரதிதாசனார். அந்தக் குழந்தைகளுக்கு, இளஞ்செல்வங்களுக்கு, ஓர் அரும்பெரும் செல்வம் இந்நூல் என்று ''சிறுவர் இலக்கிய'' நூலைப் பாராட்டுகின்றார் ஆழ்வார்கள் ஆய்வுமையத்தின் துணைச் செயலாளர் கவிஞர் டாக்டர் த. கோவேந்தன் அவர்கள்.

வருங்காலத்தில் சிறுவர், சிறுமிகள் என்னென்ன கற்கவேண்டும், கற்றபடி எப்படி ஒழுக வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்று வழிகாட்டும் கற்கண்டுக் கவிதைகள் இச் ''சிறுவர் இலக்கிய'' நூலை அணிசெய்கின்றன. அவற்றில் மிகப்பல கவிதைகள் ஆன்மீக நெறி ஊட்டும் அருட் கவிதைகள் என்பன குறிப்பிடத்தக்கது.

"தெய்வம் உண்டு நம்பு - அந்தத்
தெய்வமும் ஒன்றே ஒன்று"

என்று ''ஒன்றென்று தெய்வம் உண்டென்றிரு'' என்ற பட்டினத்தடிகளின் வாக்கை இளஞ்சிறார்தம் உள்ளத்தில் இனிமையாய்ப் பதிக்கின்றார் ஆசிரியர்.

தமிழ்மொழியைப் பக்தியின் மொழி என்று பாங்குடன் போற்றுவர் அறிஞர்கள். ஆசிரியரும்

"ஞானம் செறிந்த மொழி - சூரிய
ஞாலம் அளந்த மொழி"
"தானம் தவம் புரிவீர்" என்றே
சாற்றும் தெய்வ மொழியே"

என்று அருட்பெருஞ்சோதி மொழியாகத் தமிழைப் போற்றி ஆன்மீகமும் தமிழும் இரண்டறப் பின்னிப் பிணைந்துள்ள சிறப்பைப் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

''இசை பயில்க'' என்ற தலைப்பிலுள்ள கவிதையில்

"முத்தமிழ் இயல் இசை நாடகம்
மூன்றிலும் இசை நடு நாயகம்"

என்று இசையினைப் போற்றி இசையினால் இறையருள் பெறுதல் எளிது என்று காட்டுகின்றார் ஆசிரியர்.

''ஆன்மநேயம்'' என்பது அருளாளர்கள் நமக்கு உணர்த்தியுள்ள அற்புதக் கருத்தாகும். இதனை ஆசிரியரும் ''எல்லா உயிர்களும் நம் உடன் பிறப்பே'' என்ற கவிதையில் நயமுற விளக்குகின்றார்.

"கல்லையும் கொம்பையும் எடுக்காதே - நாய்
கன்றினை, பூனையை அடிக்காதே
தொல்லை படவைத்துச் சிரிக்காதே! பட்டாம்
பூச்சியை - தும்பியை வதைக்காதே"

என்று பாடி

"எல்லா உயிர்களும் உடன்பிறப்பே - என்றே
உணர்ந்தால் நீ, கருணை ஒளிவிளக்கே"

என்று கருணை விளக்கேற்றுகின்றார் கவியரசர் முருகுவண்ணன்.

"தமிழ்நாடு" என்ற கவிதையில்

"எங்கெங்கு காணினும் கோயில்களாம் - கேட்கும்
எல்லாம் தமிழிசைப் பாடல்களாம்
எங்கும் திருவிழாக் கோலங்களாம் - இயற்கை
எழில் கொஞ்சும் நாடு தமிழ்நாடாம்"

என்று காட்டுவது மிகச்சிறப்பு.

வடலூர் வள்ளலைப் பாடி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளையும் பாடி மகிழ்கின்றார் கவிஞர் முருகுவண்ணன்.

"வாடும் பயிரினையே கண்டு
வாடி மனம் துடித்தார்
வாடும் உயிருக்கெல்லாம் - உதவும்
மனிதர்க்கே இன்பம் என்றார்"
"எல்லாரும் நல்லவராய் - உலகில்
இசைந்தென்றும் வாழ்ந்திடவே
வல்ல சன்மார்க்கம் கண்டார் - வடலூர்
ராமலிங்க வள்ளலே" (பக். 82)

"திருமுருக கிருபானந்த
வாரியார் முத்தமிழ்க் கொண்டல்
முருகப் பெருமான் புகழும், தமிழும்
முழக்கிய தெய்வத் தொண்டர்"
"இளமையிலே கிருபானந்த
வாரியார் சுவாமிகள் போலே
இளமை யிலே நீங்களும் கற்றால்
அடைவீர் பயன் எல்லாமே" (பக். 97)

இவை போன்ற மணியான, முத்தான, சத்தான, குழந்தைகள் வளர்ச்சிக்கு வித்தான, கவிதைகள் இச் ''சிறுவர் இலக்கிய நூலை'' அணி செய்திடக் காணுகின்றோம்.

ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் படித்துப் பயன் கொள்ள வேண்டிய நூல். ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்க வேண்டியநூல். ஒவ்வொரு பள்ளியிலும், நூலகத்திலும் அணிசெய்து இன்றைய இளையதலைமுறையை நாளைய நல்லிளம் தலைவர் தலைவியராய் உயர்த்தும் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் கற்பிக்கும் ஞானவிளக்கு இந்நூல்.

# வினாவும் விடையும் (சூரியன் தொடர்பானவை)

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன்

1. சூரியனை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயத்தின் பெயர் என்ன?
2. சூரிய புராணங்கள் எத்தனை?
3. சூரியனுக்கு ஆற்றலை அளிக்கும் தேவி யார்?
4. சூரியன் மற்ற கிரகங்களுடன் கோயில் கொண்டுள்ள தமிழகத் திருத்தலம் எது?
5. சூரிய பகவானின் ஒரே கோயில் எங்குள்ளது?
6. சூரியனின் பயணத்தின் அடிப்படையில் அமைந்த ஓர் ஆண்டின் இரு பிரிவுகள் எவை?
7. சூரிய கிரகணம் எந்தத் திதியில் ஏற்படும்?
8. சூரிய பகவானின் சாரதி (தேர்ப்பாகன்) யார்?
9. சூரியனிடம் இலக்கணம் கற்றவர் யார்?
10. சூரிய வம்ச மன்னர்கள் குறித்து காளிதாசன் இயற்றிய காவியம் எது?
11. அகத்தியர் இராமனுக்கு உபதேசித்த சூரியன் பற்றிய தோத்திரம் எது?
12. ''பலர் புகழ் ஞாயிறு'' என்று புகழ்ந்த சங்கத் தமிழ்ப் புலவர் யார்?
13. ''ஞாயிறு போற்றுதும்'' என்று போற்றிய தமிழ்க் காப்பியம் எது?
14. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய, சூரியன் பற்றிய முதல் விரிவான தமிழ் நூல் எது?
15. வட்டத் தகட்டின் வழியே நியூட்டன் விளக்கிய 'நிறப்பிரிகை' கொள்கை பொதிந்துள்ள புராண ஐதிகம் என்ன?
16. சூரியனைச் சிறைப்பிடித்த அசுர குமாரன் யார்?
17. நவகோள்களின் முதல்வனாய் இருப்பதால் சூரியன் பெற்ற பெயர் என்ன?
18. குடந்தையில் உள்ள எந்தக் கோயிலில் சூரியன் ஒளி ஈசன் மீது விழும் நாட்களில் சூரிய பூஜை நடைபெறுகிறது?
19. 'ஞாயிறு' என்ற ஊரின் சிறப்பு என்ன?
20. 'கார்த்திகை ஞாயிறு' புனித நீராடல் நடைபெறும் தலம் எது?
21. 'ரத சப்தமி' எந்த மாதத்தில் வருகிறது?
22. சூரிய பகவானின் இரண்டு சக்திகள் யாவர்?

## விடைகள்

1. சௌரம்
2. ஒன்று
3. காயத்திரி
4. சூரியனார் கோயில்
5. கோனார்க்
6. தட்சிணாயணம், உத்தராயணம்
7. அமாவாசை
8. அருணன்
9. அனுமார்
10. இரகு வம்சம்
11. ஆதித்ய ஹ்ருதயம்
12. நக்கீரர்
13. சிலப்பதிகாரம்
14. ஞாயிறு ஆயிரம்
15. சூரியத் தேருக்கு ஏழு குதிரைகள்
16. பானுகோபன் (சூரனின் மகன்)
17. ஆதித்யன்
18. திரு நாகேஸ்வரம்
19. சங்கிலி நாச்சியார் பிறந்த ஊர்
20. திருவாஞ்சியம்
21. தை
22. சாயை, சுவத்ஸலை.

★★★



நாகப்பட்டினம், அருள்மிகு நெல்லுக்கடை மாரியம்மன் திருக்கோயில் பிரகார மண்டபத் திறப்புவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் பிரகாரமண்டபத்தினைத் திறந்து வைத்தார்கள்.




நாகப்பட்டினம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டிடத்தை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்வளர்ச்சி, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் திறந்து வைத்தார்கள். இத்திறப்புவிழா நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திருமிகு சிவதாஸ் மீனா இ.ஆ.ப., மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொணடு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்கள். தஞ்சை இணை ஆணையர் அவர்களும் மற்றும் நாகப்பட்டினம் உதவி ஆணையர் திருமதி பா. பாரதி, பி.எல்., அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.





திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி ஆழித்தேரோட்ட விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் வ்டம்பிடித்துத் தேர்த்திருவிழாவினைத் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு செ. உமாசங்கர், இ.ஆ.ப., மற்றும் அறநிலையத்துறை அதிகாரிகள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.